




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 156 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 156 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


### இன்றைய நாள்


ஞாயிற்றுக்கிழமை
(18–01–2026)
விசுவாவசு ஆண்டு, தை –4
பிறை: தேய்பிறை
திதி
அமாவாசை பின்னிரவு
2.30 வரை பிறகு பிரதமை
நட்சத்திரம்:
பூராடம் காலை 11.31 வரை
பிறகு உத்திராடம்
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30–6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00 – 1.30 மணி
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | உற்சாகம் |
| ரிஷபம் | கடமை |
| மிதுனம் | நற்செயல் |
| கடகம் | சுகம் |
| சிம்மம் | புகழ் |
| கன்னி | நன்மை |
| துலாம் | விவேகம் |
| விருச்சிகம் | மகிழ்ச்சி |
| தனுசு | தனம் |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | பாராட்டு |
| மீனம் | ஆர்வம் |

# ஜல்லிக்கட்டில் சிறந்த வீரருக்கு அரசு வேலை

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு!




**மதுரை,ஜன.18:**

ஜல்லிக்கட்டில் அதிக காளைகளை அடக்கும் சிறந்த வீரருக்கு அரசு வேலை வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பொங்கல் பண்டிகையொட்டி, ஆண்டுதோறும் தமிழரின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்கநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெறுவது வழக்கம். அதன்படி, நேற்று முன்தினம் அவனியாபுரத்திலும், நேற்று பாலமேட்டிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் வெகு விமரிசையாக நடைபெற்றன.

இந்த நிலையில் இன்று (ஜன.17) உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டி கோலாகலமாய் துவங்கியது. இந்தப் போட்டியை பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி கொடியசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டியைக் காண்பதற்காக முதல்வர் ஸ்டாலின் இன்று மதுரைக்கு வந்தார். மதுரை விமான நிலையத்தில் இருந்து அலங்காநல்லூர் வருகை தந்த முதல்வர் ஸ்டாலினுக்கு சாலைகளின் இருபுறங்களிலும் திரண்டிருந்த மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

ஜல்லிக்கட்டுப் போட்டியைக் காண காலை 11.10 மணியளவில் விழா மேடை திடலுக்கு வந்த முதல்வர் ஸ்டாலினுக்கு அமைச்சர் பி. மூர்த்தி பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கே.என். நேரு, மதுரை எம்.பி. சு. வெங்கடேசன், சோழவந்தான் சட்டப்பேரவை உறுப்பினர் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வெற்றிபெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்குப் பரிசுப் பொருள்களை வழங்கிய முதல்வர் ஸ்டாலின்.

போட்டியைக் கண்டுகளித்த முதல்வர் ஸ்டாலின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய காளைகளின் உரிமையாளருக்கு தங்க மோதிரம் அணிவித்து கௌரவப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து அலங்காநல்லூரில் இரண்டு முக்கிய அறிவிப்புகளையும் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

அதில், மாடுபிடி வீரர்களின் நீண்டநாள்களாக சிறந்த மாடுபிடி வீரருக்கு அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து வந்தனர்.

வெற்றிபெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு, வீரர்களுக்குப் பரிசுப் பொருள்களை வழங்கிய முதல்வர் ஸ்டாலின்.

இந்த நிலையில், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக முதல்வர் ஸ்டாலின், "ஜல்லிக்கட்டில் அதிக மாடுகளைப் அடக்கும் சிறந்த வீரருக்கு கால்நடைப் பராமரிப்புத்துறையில் அரசுப் பணி வழங்கப்படும் என்றும், அலங்காநல்லூரில் காளைகளுக்கு ரூ.2 கோடியில் சிறந்த உயர்தர சிகிச்சை, பயிற்சி மையம் அமைக்கப்படும்" என்றும் அறிவித்தார்.

முதல்வர் ஸ்டாலினின் இந்தக் கோரிக்கை மாடுபிடி வீரர்கள் மற்றும் ஜல்லிக்கட்டு நிர்வாகத்தினர் மத்தியில் பெரும் மகிழ்ச்சி, உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## இஸ்ரேலில் உள்ள வெளிநாட்டினர் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தல்

**ஜெருசலேம்,ஜன.18:**

ஈரானில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு 3,000-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அமெரிக்க படைகள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் கூறியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட தகவலில், "இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். தேவையற்ற பயணத்தை தவிர்க்க வேண்டும். அவசர உதவி தேவைப்பட்டால் இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம்" என தெரிவித்துள்ளது. இதேபோல் இஸ்ரேலில் உள்ள அமெரிக்கா, இங்கிலாந்து தூதரகங்களும் தங்கள் நாட்டினரை எச்சரித்துள்ளன.

## ஆணவ கொலைக்கு எதிராக கர்நாடகாவில் விரைவில் தனிச் சட்டம்: 10 ஆண்டு சிறை, ரூ.3 லட்சம் அபராதம்



**பெங்களூரு,ஜன.18:**

கர்நாடகாவில் சாதி, மத, ஆணவ கொலைகளை தடுக்கும் நோக்கில் தனிச்சட்டம் கொண்டுவர மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் அண்மைக்காலமாக சாதி, மதம் கடந்து காதல் திருமணம் செய்யும் தம்பதிகள் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. இதுதொடர்பாக கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஷ்வரா, சமூக நலத்துறை அமைச்சர் எச்.சி.மஹாதேவப்பா உள்ளிட்டோரும் முதல்வர் சித்தராமையாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் ஆணவ கொலைகளை தடுக்க தனிச்சட்டம் கொண்டு வருவதற்கான மசோதாவை தயாரிக்கும் படி சித்தராமையா சட்ட அமைச்சகத்துக்கு உத்தரவிட்டார். இதற்கான சட்ட மசோதா கடந்த மாதம் தயாரான நிலையில், அதுகுறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து, ஒப்புதல் பெற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகள் வரை தண்டனை இந்த சட்ட மசோதாவில், "18 வயதான பெண்ணும், 21 வயதான ஆணும் தங்களின் விருப்பத்தின்பேரில் திருமணம் செய்துகொள்ள முழு உரிமை இருக்கிறது.

அவர்களை சாதி, மதம், மொழி, வர்க்கம், இனம், ஊர் ஆகியவற்றின் பெயரில் பாகுபாடு காட்டி, கவுரவத்தின் பெயரில் திருமணம் செய்வதை தடுக்கவோ, தாக்கினாலோ, கொலை செய்தாலோ குற்றமாகும். உயிருடன் மகளுக்கோ, மகனுக்கோ இறுதி சடங்கு, திதி போன்ற சடங்குகள் செய்வது, மனரீதியாக தொல்லை கொடுப்பது, மிரட்டல் விடுப்பது, குடும்பத்தை விட்டு ஒதுக்கி வைப்பது போன்றவையும் இந்த சட்டத்தின்படி குற்றமாகும்.

ஆணவக் கொலையில் ஈடுபடும் குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அபராதமாக ரூ.1 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை விதிக்கப்படும். காதலர்கள் தங்களுக்கு பாதுகாப்புக் கோரி, காவல் நிலையத்தில் புகார் அளித்த 6 மணி நேரத்துக்குள் மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என கூறப்படுகிறது.

## நீட் முதுநிலை தேர்வு கட் – ஆஃப் மதிப்பெண்: பொதுநல மனு தாக்கல்

**புதுடெல்லி,ஜன.18:**

நீட் முதுநிலை தேர்வு கட்-ஆஃப் மதிப்பெண் குறைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சமூக ஆர்வலர் ஹரிசரண் தேவ்கான் உள்ளிட்ட நால்வர் சார்பில் வழக்கறிஞர் நீமா தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், "தேசிய தேர்வுகள் வாரியம் கடந்த 13-ம் தேதி வெளியிட்ட அறிவிக்கையில், நீட் முதுநிலை தேர்வு கட்-ஆஃப் மதிப்பெண்ணை பூஜ்ஜியத்துக்கு கீழே குறைத்துள்ளது. இதனால் மருத்துவக் கல்வித் தரம் பாதிக்கப்படும். எனவே அறிவிக்கையை ரத்து செய்ய கோரப்பட்டுள்ளது.

## "மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர்" எம்ஜிஆர்: விஜய்



**சென்னை,ஜன.18:**

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், அதிமுக நிறுவனத் தலைவருமான எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரும் அவருக்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில், "தமிழக மக்களின் நெஞ்சங்களில் பொன்மனச் செம்மலாக, ஏழை, எளியோருக்கான நலத்திட்டங்களின் நாயகராக, பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயகப் பாதையில், சாமானியர்களுக்கும் அதிகாரமளித்து, மக்களாட்சி செய்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பிறந்த நாளில், அவருக்கு என் புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "மகளிருக்கு மாதம் ரூ.2000, ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம்" - இபிஎஸ் 5 வாக்குறுதிகள்



**சென்னை,ஜன.18:**

"மகளிருக்கு மாதம் ரூ.2000 வழங்கப்படும், ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம் செயல்படுத்தப்படும்" என முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109-வது பிறந்தநாள் விழாவையொட்டி சென்னையில்செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி. கே.பழனிசாமி, முதற்கட்ட தேர்தல் வாக்குறுதியாக 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.

1. மகளிர் நலன் : (குல விளக்குத் திட்டம்) - சமூகத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்கிட, குலவிளக்கு திட்டத்தின் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூபாய் 2,000/- வழங்கப்படும். இத்தொகை குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

2. ஆண்களுக்கும், மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம்: நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3. அனைவருக்கும் வீடு (அம்மா இல்லம் திட்டம்): அம்மா இல்லம் திட்டம்' மூலம், கிராமப்புறங்களில் குடியிருப்பதற்கு சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

அதேபோல், நகரப் பகுதிகளில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி அடுக்குமாடி வீடுகள் கட்டி 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் விலையில்லாமல் வழங்கப்படும்.


அதைப் போலவே, ஒரே குடும்பத்தில் வசிக்கும் பட்டியலின மக்கள், அவர்களுடைய மகன்கள் திருமணமாகி தனிக்குடித்தனம் செல்கின்றபோது, அரசே இடம் வாங்கி. அவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

4. 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்: 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம், 150 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டமாக உயர்த்தப்படும்.

5. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்: மகளிருக்கு ரூ. 25,000 மானியத்துடன், 5 லட்சம் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

ஆகிய 5 வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

# பாரிவேட்டை உற்சவம்



ஸ்ரீ வண் புருஷோத்தமன் பாரிவேட்டை உற்சவம் மாலை புறப்பாடு பெருமாள் குதிரை வாகனம் திருநாங்கூர் திவ்ய தேசம் .

## கும்பகோணம்
# ஸ்ரீசார்ங்கபாணி ஸ்வாமி கனுபுடி உத்சவம்



ஸ்ரீகோமளவல்லி தாயார் ஸ்ரீஸுதர்ஸன வல்லி தாயார் ஸ்ரீசீதாதேவி தாயார் சாரங்கபாணி கோவில் எழுந்தருளி கனுபுடி உத்ஸவம் நடைபெற்றது... பிறந்தகத்து சீதனமாக ஸ்ரீதாயார்களின் ப்ரசாதமாக அனைத்து ஸுமங்கலி பெண்ணளுக்கும் மஞ்சள் குங்குமம் ரவிக்கைபீஸ் ஸௌமாங்கல்ய திரவியங்கள் வழங்கப்பட்டது.

# எம்ஜிஆரின் 109ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம்



**திண்டுக்கல், ஜன.18:** முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 109ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து அன்னதானம் வழங்கப்பட்டது.

திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே உள்ள எம்ஜிஆர் சிலைக்கு அவரது 109-வது பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் மாநில அமைப்பு செயலாளர் மருதராஜ், மாநகராட்சி எதிர்கட்சித் தலைவர் ராஜ்மோகன் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து பொதுமக்கள் 200க்கும் மேற்பட்டோருக்கு இனிப்பு பொங்கல், குஸ்கா என அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜசேகரன் உள்ளிட்ட பகுதி செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**வெ.முருகேசன்-**
**மாவட்ட செய்தியாளர், திண்டுக்கல்.**

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் விறுவிறுப்பு 48 பேரை பதம் பார்த்த காளைகள்!

**மதுரை, ஜன.18:** உலகப்புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி காணும் பொங்கல் திருநாளை முன்னிட்டு நேற்று காலை சுமார் 7:00 மணியளவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் ஆகியோர் கொடியசைத்து போட்டியைத் தொடங்கி வைத்தனர்.

சுமார் 1,100 காளைகளும், ஏறத்தாழ 600 மாடுபிடி வீரர்களும் இப்போட்டியில்



களமிறங்கி உள்ளனர். போட்டி மொத்தம் 10 முதல் 12 சுற்றுகளாக நடைபெறுகிறது.

இந்நிலையில், மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் காவலர்கள், வீரர்கள், காளை உரிமையாளர்கள் என 48 பேர் காயம் அடைந்துள்ளனர்.

## மயிலாடுதுறையில் புனித அந்தோனியார் திருத்தல ஆண்டு திருவிழா
# சமய நல்லிணக்க விழாவாக நடைபெற்ற தேர்பவனி மற்றும் திருப்பலியில் திரளானோர் பங்கேற்பு



**மயிலாடுதுறை, ஜன, 18:** மயிலாடுதுறையில் பிரசித்தி பெற்ற புனித பதுவை மற்றும் வனத்து அந்தோணியார் திருத்தல ஆண்டு திருவிழா கடந்த 7ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து பத்து நாட்கள் மன்றாட்டு மாலை, நவநாள் ஜெபம், திருப்பலி உள்ளிட்ட பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. விழாவின் முதல் நிகழ்வாக சிறப்பு திருப்பலி நடைபெற்றது. மயிலாடுதுறை மறைவட்ட அதிபர் பேரருட்திரு.தார்சிஸ்ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் "நான் தாழ்ந்திட, அவர் உயர்ந்திட" என்ற இறைவார்த்தையை மையப்படுத்தி மறையுரையாற்றி ஆசி வழங்கினார்.

இந்த சிறப்பு திருப்பலியில் அந்தோணியார் திருத்தல பங்குத்தந்தை தேவதாஸ் இக்னேஷியஸ் அடிகளார் மற்றும் உதவி பங்குத்தந்தை மனோஜ் சேவியர் அடிகளார் உலக அமைதிக்காகவும், விவசாயம் செழிக்கவும், இயற்கை பேரிடர் பாதிப்புகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படவும், மனிதநேயம் நிலைத்திடவும் வேண்டி மறைவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் மக்களோடு இணைந்து சிறப்பு பிரார்த்தனை வழிபாடு நடத்தினர்.

கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி பிற சமயத்தவரும் நல்லிணக்கத்தோடு இணைந்து கொண்டாடிய புனித அந்தோணியார் திருத்தல ஆண்டு திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேர்பவனி நடைபெற்றது.

புனித மைக்கேல் சம்மனசு, புனித ஆரோக்கியநாதர், புனித செபஸ்தியார், புனித ஆரோக்கியமாதா, புனித பதுவை மற்றும் வனத்து அந்தோணியார்களின் திருஉருவம் தாங்கிய ஐந்து தேர்கள் இன்னிசை முழங்க, வான வேடிக்கையுடன் ஆலய வளாகத்தில் தொடங்கி, கொண்டாரெட்டித்தெரு, அழகப்பசெட்டித்தெரு உள்ளிட்ட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.

திருப்பலி மற்றும் தேர் பவனி நிகழ்வுகளில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அன்பிய குழுவினர், பங்கு மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர்.

கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து நாட்கள் நடைபெற்ற திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை அந்தோணியார் திருத்தல பங்குத்தந்தை தேவதாஸ் இக்னேஷியஸ் அடிகளார் அடிகளார் தலைமையில் விழாக் குழுவினர் செய்திருந்தனர்.

# கும்பகோணம் அருகே தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் 109-வது பிறந்தநாள் விழா: திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அதிமுகவினர் மரியாதை

**கும்பகோணம்: ஜன 18:** தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மேற்கு ஒன்றியம், பட்டீஸ்வரம் ஊராட்சியில் "சத்துணவு தந்த சரித்திர நாயகன்" அ.இ.அதிமுகவின் நிருவனருமான தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 109-வது பிறந்தநாள் விழா அதிமுக சார்பில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

**சிலைக்கு மரியாதை:**

பட்டீஸ்வரத்தில் அமைந்துள்ள புரட்சித் தலைவரின் திருவுருவச் சிலைக்கு, அதிமுக மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுப்பு அறிவழகன் மற்றும் குடந்தை மேற்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் T.K. ராஜா ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

**நலத்திட்ட உதவிகள்:**

இதனைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மேலும்,



எம்.ஜி.ஆரின் பிறந்தநாளை முன்னிட்டு அப்பகுதி மக்களுக்கு காலை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் பட்டீஸ்வரம் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் காமராஜர், கிளைக் கழகச் செயலாளர் ஜீவா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் தங்க சின்னப்பா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும் கிளைச் செயலாளர்கள் வாசு, பாலு, அன்பழகன், பெரியசாமி மற்றும் கழக முன்னோடிகள், தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு புரட்சித் தலைவருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**நிருபர் அ, மகேஷ்**

## மேட்டுப்பாளையம் அருகே பகத்தூர் கிராமத்தில்
# 200 ஆண்டுகளாக மாட்டு பொங்கல் விழாவை ஒட்டி விடிய விடிய நடைபெற்ற இரணிய நாடகம் தூங்காமல் கண்விழித்து கண்டு கழித்த கிராம மக்கள்

**கோவை, ஜன.18:** கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அடுத்த சிறுமுகை அருகே உள்ள பகத்தூர் கிராமத்தில் 200 ஆண்டுகளாக பழமை மாறாமல் நடத்தப்பட்டு வரும் இரணியன் நாடகம் ஊர் மக்கள் சார்பில் நடைபெற்றது.

பகத்தூர் இரண்யா நாடக சபா குழு ஒருங்கினைப்பில் இரண்ய நாடகம் நேற்று இரவு 8 மணி முதல் இன்றுகாலை 9 மணி வரை நடைபெற்றது.

ஆண்டுதோறும் தை மாதம் இரண்டாம் நாளான மாட்டுப்பொங்கல் அன்று தொடங்கும் இந்த இரணிய நாடகம் என்பது மகா விஷ்ணு அரக்கன் இரனியகசிபுசை பக்த பிரகலாதன் மூலம் வதம் செய்த நிகழ்வாக நடைபெறுகிறது .

முன்னொரு காலத்தில் கடும் நோய் தொற்றில் பாதிக்கப்பட்ட இந்த கிராமம் பல மக்களின் உயிர்களை இழந்துள்ளது அதிலிருந்து விடுபட



முன்னோர்கள் வழிகாட்டுதல் ஒடு இந்த ஆன்மீக நாடகம் தொடங்கப்பட்ட நிலையில் பின்னர் அந்த தொற்றுநோயில் இருந்து மீன்டுள்ளனர்.

எனவே அன்று முதல் இன்று வரை 200 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த ளி இரணிய நாடகத்தை உள்ளூர் இளைஞர்களே கதாபாத்திரங்களை ஏற்று நடித்து வருகின்றனர்.

இக்குழுவில் தற்போது 30 பேர் உள்ள நிலையில் இதில் உள்ளவர்கள் உள்ளூர் மட்டுமல்லாமல் வெளியூர், வெளிநாடுகளிலும் பணியாற்றி வரும் நிலையில் ஆண்டுதோறும் தை மாதத்தில் இந்த நாடகத்தை நடத்த எங்கிருந்தாலும் இங்கு வந்து ஒன்று சேர்வது வழக்கமாக கொண்டுள்ளனர்

இந்த நாடகத்தை கான ஏராளமான பொதுமக்கள் பகத்தூர் மைதானத்தில் குழந்தைகளுடன் விடிய விடிய கொட்டும் பணியிலும் காத்திருந்து நாடகத்தை கண்டு கழித்து மகாவிஷ்ணு நரசிம்மரை வணங்கி அருள் பெற்றனர்.

# அமைச்சருக்கு பொங்கல் வாழ்த்து



தைத்திங்கள் பொங்கல் திருநாளை முன்னிட்டு அரசியலின் முகவரி இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு P. K. சேகர்பாபு அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்த இனிய தருணம்.

# குளச்சல் அருகே எம்.ஜி.ஆர் அவர்களின் 109-வது பிறந்தநாள் விழா: முன்னாள் அமைச்சர் பச்சைமால் மரியாதை



**குளச்சல், ஜன. 18:** கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே உள்ள உடையார்விளையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 109-வது பிறந்தநாள் விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அஇஅதிமுக கல்லுக்கூட்டம் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் அகஸ்டின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், முன்னாள் அமைச்சர் பச்சைமால் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, இனிப்புகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் அஇஅதிமுக கன்னியாகுமரி மாவட்ட பொருளாளர் திலக், மாநில எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் வழக்கறிஞர் சிவ செல்வ ராஜன், கழக முன்னோடி எஸ்.எம். பிள்ளை, அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆறுமுகராஜா, மற்றும் குளச்சல் நகர செயலாளர் ஆண்ட்ரோஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், முன்னாள் மாவட்ட மாணவரணி செயலாளர் ரவீந்திர வர்ஷன், எம்.ஜி.ஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் ஜான்சன், அம்மா ஆண்டனி, அமல் ராஜ், ஏசுதாஸ், ஆட்டோ ஆரோக், ஹோட்டல் ராதா, லூயிஸ், ஆகாஷ், ஆண்ட்ரூஸ், அபிஷேக், சுப்பிரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்

# யாருடன் கூட்டணி: 19-ந்தேதி அறிவிக்கும் காங்கிரஸ்?

**சென்னை, ஜன.18:** தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியின் பிரதான கட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில், நடிகர் விஜய் த.வெ.க. என்னும் புதிய கட்சியை தொடங்கியது முதல் காங்கிரஸ் கட்சிக்குள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு, கூடுதல் இடங்களில் போட்டி என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

இதற்கிடையே ராகுல்காந்தியின் நெருங்கிய வட்டாரத்தில் உள்ள அகில இந்திய காங்கிரஸ் தொழில் வல்லுனர் மற்றும் தரவு பகுப்பாய்வு துறை தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி அவ்வப்போது நடிகர் விஜய்யை சந்தித்து தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி வந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருச்சி வேலுசாமி தலைமையில் ஜனநாயகன் பொங்கல் விழா கொண்டாடி தி.மு.க. கூட்டணியில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு, அதிக இடங்களில் போட்டி கோரிக்கையை மேலும் வலுப்படுத்தி உள்ளார்.

இந்தநிலையில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் குறித்த ஆயத்தக் கூட்டம் டெல்லியில் இன்று நடைபெற உள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் தலைமையகமான டெல்லி, இந்திரா பவனில் 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் குறித்த ஆயத்தக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி ஆகியோர்



பங்கேற்க உள்ளனர்.

கூட்டத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள், தமிழகத்தை சேர்ந்த அகில இந்திய காங்கிரஸ் துணை அமைப்புகளின் தலைவர்கள், முன்னாள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல்காந்தியை சந்திக்க உள்ளனர்.

தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்தால் கூடுதல் சீட் கேட்பது தொடர்பாகவும் ஆலோசனை நடைபெற உள்ளது. காங்கிரசிற்கு சாதகமான தொகுதிகளுடன் மாநில நிர்வாகிகள் டெல்லி சென்றுள்ளனர்.

ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் சென்னையில் 19-ந்தேதி காங்கிரஸ் மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நடைபெறுகிறது. இன்று எடுக்கப்படும் முடிவு செயற்குழுவில் தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

செயற்குழுவிற்கு பின்னர் கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பை நாளை மறுநாள் காங்கிரஸ் வெளியிடுகிறது. 2029 பாராளுமன்ற தேர்தலையும் மனதில் வைத்து கூட்டணி முடிவை எடுக்க காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மிக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், திருத்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..



S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை துறையில் ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


NEWLY CONSTRUCTED A GRADE INDUSTRIAL WAREHOUSE
available on Lease at TADA, Near Sri City, A.P
Approx 1.15 lakh sq.ft.
Ample parking place for lorries and cars
Warehouse on main NH5 express high way having direct approach on high road
Close vicinity to 3 ports and Sri City
Construction as per "A" Grade warehouse norms
98402 97142


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE



அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3 CALENDAR
MANJALMART.COM
RS.100
9337501889
7789941009


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

## கவிதை அரங்கம்!




அவமானங்கள் கற்று
தந்த பாடங்கள் அவ்வளவு
எளிதில் மறக்காது

எட்ட வரும் வாய்ப்புகள்
ஏற்றிச் செல்லும் வரை
காத்திருங்கள் பயணங்கள்
பாதைகளாக மாறும்

நீ அமரப்போகும்
நாற்காலியைச்
செதுக்கும்
விஸ்வகர்மா
உன் கல்வி

பறக்க நீ தயாரானால்
தானாகவே முளைக்கும்
சிறகுகள்

## வாழ்க்கை தத்துவம்...



கற்கண்டும்
கல் தான்
ருசிக்காத வரைக்கும்
வாழ்க்கையும்
இனிமை தான்
வலியினை உணராத வரைக்கும்

விளகிய பிறகு
விளக்கங்கள் எதற்கு
வேண்டாம் என்ற பிறகு
விவாதங்கள் எதற்கு

சிறப்பான
விடைகளை விட
சிந்திக்க வைக்கும்
வினாக்களே
அறிவை வளர்க்கும்

கைப்பிடி இல்லாத
பிளேடை போல் தான்
வாழ்க்கையும்
கவனமாக கையாள்வோம்

## நீத்தார்க்கடன்..

சிந்தாமணிப் படித்துறையில் இன்று கூட்டம் மிக அதிகம். காரணம் தை அம்மாவாசை. திருச்சி மாவட்டமே வந்துவிட்டதா என்ன? காலையிலிருந்தே நூற்றுக் கணக்கான தர்ப்பணங்கள். நீத்தார்க் கடன் தீர்க்கும் மகன்கள்.. மகள்கள்.. சொந்தங்கள். கரைமீறிப்பாயும் அகண்ட காவேரிக்கரை களைகட்டியது. அதோ அங்கே ஸ்ரீரங்கம் கோபுரம்.. இந்தப் பக்கம் காவேரி ஆற்றுப் பாலம். நடுவ கவலையின்றி ஓடுகிறாள் காவேரி.

சாஸதிரிகள்.. ஆங்காங்கே அமர்ந்தே மந்திரங்கள் சொல்ல.. எள்ளு நீர் இரைத்தனர் மக்கள். நீத்தார் கடனாற்றினர்.

சங்கரன் மட்டும் வேடிககைப் பார்த்தப்படி படிக்கட்டில் அமர்ந்திருந்தான். அவன் பையிலோ முழுதாக ஆயிரம் ரூபாய். இதை வைத்து இறந்து போன தன் தாய் தகப்பனுக்கு தர்ப்பணம் செய்ய காத்திருக்கிறான்.

வீட்டிற்கு மூத்தவன். ஆயினும் என்ன பொறுப்பற்றவன். தான்தோன்றி.. குடித்துக் கெட்டான். இரண்டு தம்பிகள் இரண்டு தங்கைகள். இருந்தும் தாய் தந்தை மறைந்தபின் தனியானான். சாஸ்திரம் சம்பிரதாயம் அறியான். அறிந்தும் ஆர்வமில்லான்.

ஏதோ கிடைத்த வேலையை செய்து கூலியாளாக.. சமையல் வேலைக்காரனாக உலவுகின்றான்.

ஆண்டாள் தெருவில் ஒரு சிறிய அறை. ஏதோ வாழ்க்கை வண்டி ஓடுகிறது. கல்யாணம் இல்லை. காட்சியும் இல்லை.

அவன் உறவினர்கள் தம்பி தங்கைகள் நல்ல நிலையில் இருந்தும் கண்டு கொள்வதில்லை. பணமில்லை என்றால் உறவும் இல்லை. பாசமும் இல்லை.

அவன் மனதிலும் ஒரு ஆசை. இந்த தை அம்மாவாசைக்கு சிந்தாமணிக் கரையில் தாய் தந்தைக்கு நீத்தார் கடன் செய்ய வேண்டும்.

அவனுக்குத் தெரிந்த சந்தானம் ஐயரிடம் சொன்னான். அவரும் பேஷா.. செய்யலாமே. சரியாக பத்து மணிக்கு காவேரி கரைக்கு வந்துடு! காரியத்துக்கு பொருள் தட்சணை என ஆயிரம் ரூபாய் எடுத்துண்டு வா.. என்றார். இதோ காலையிலே வந்து கடன் வாங்கி வைத்த ஆயிரம் ரூபாயோடு காத்திருக்கிறான்.

தாயும் தந்தையும் அவன்மீது அன்பைப் பொழிந்தவர்கள். சிறு வயதில் சீராட்டி வளர்த்தனர். படிப்புதான் வரவில்லை. வேலைக்குச் சென்றான். சகவாசம் சரியில்லை கெட்டான் சங்கரன். என்ன செய்ய? ஒருநாள் கனவுகளோடு பெற்றவர்கள் கரைந்து போயினர். தம்பி தங்கைகள் மறந்து போயினர். வசதியற்ற குடும்பம். அடுப்பில் வெந்து பிழைப்பான். மூச்சு முட்டக் குடிப்பான். இருப்பினும் நீத்தார் கடன் தீர்க்க துடித்தான்.

சாலையைப் பார்த்தப்படி படிமேலே அமர்த்திருந்தான். ஆட்டோக்கள் டெம்போகள் இருசக்கர வாகனங்கள் பரபரத்தப்படி ஓடின காவேரியும் ஓடிக் கொண்டிருக்கிறாள்.

அப்போது டமார் என்று ஒரு சத்தம். ஐயோ அம்மா அப்பா என்ற ஒரு முதியவர் அலறுகிற சத்தம். டெம்போ ஒன்று வேகமாக வந்து அந்த முதியவர் மேல் ஏறி நின்றது. துடிதுடித்தார். குருதி வழிந்து ஓடியது.

கூட்டம் சேர்ந்தது. மயக்கத்தில் முதியவர். ஐயோ பாவம் என்று பார்வையாளர்கள். ஒருவரும் உதவிட முன் வரவில்லை. சங்கரன் எழுந்தான். நடந்தான் கூட்டத்தை விலக்கினான். அந்த முதியவரைத் தூக்கி ஒரு ஆட்டோவை நிறுத்தி பெரிய ஆஸ்பத்ரிக்கு செல்கின்றான். எதிரே சந்தானம் ஐயர் வந்து கொண்டிருந்தார்.

அவனோ கண்டு கொள்ளவில்லை. முகமறியா பெரியவரை காப்பாற்ற செல்கின்றான். தர்ப்பணம் இல்லை. சடங்குகள் இல்லை. காரியம் இல்லை. அந்த பெரியவர் உடல்நலம்பெற.. தாயுமானவரை வேண்டிக்கொண்டே செல்கிறான். இதுவும் ஒருவகையில் நீத்தார் கடனன்றோ..! அதனை ஆமோதிப்பிது போல காவேரி ஓடிக்கெண்டிருக்கிறாள்.

**வே.கல்யாண்குமார்.**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*இப்ப யாராவது காசு இல்லாம சாப்பிட வந்தா தேவலை...!*

*ஏன் முதலாளி, அப்படிச் சொல்றீங்க?*

*தொடர் பவர்கட் காரணமா மாவு ஆட்ட ஆள் வேண்டியிருக்கே...!*



## தினம் ஒரு சமையல்



### பேலியோ மிளகு பன்னீர்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வீட்டில் தயாரிக்கப்பட்ட பன்னீர் | - 1 கப் |
| கடுகு | - 1/4 தேக்கரண்டி |
| வெங்காயம் | - 1/2 கப் |
| பச்சை மிளகாய் | - 2 எண் |
| தக்காளி | - 1 இல்லை |
| கறிவேப்பிலை | - சில |
| இஞ்சி, பூண்டு பேஸ்ட் | - 1 தேக்கரண்டி |
| மிளகாய் தூள் | - 1 தேக்கரண்டி |
| கொத்தமல்லி தூள் | - 1 தேக்கரண்டி |
| உலர்ந்த வறுவல் மற்றும் தூள் செய்ய: | |
| மிளகு | - 10 எண் |
| சோம்பு (சோம்பு) | - 1 தேக்கரண்டி |

செய்முறை:



* ஒரு கடாயில் தேங்காய் எண்ணெயை சூடாக்கி கடுகு சேர்க்கவும். வெங்காயம், ஜி.சில்லி, கறிவேப்பிலை சேர்த்து சிறிது நேரம் வறுக்கவும். பின்னர் இஞ்சி,பூண்டு பேஸ்ட் சேர்த்து, மூல வாசனை நீங்கும் வரை வறுக்கவும்.

* இப்போது மிளகாய் தூள் & கொத்தமல்லி தூள் சேர்த்து, 2 நிமிடங்கள் வறுக்கவும். பின்னர் தக்காளி சேர்க்கவும். 5 நிமிடங்களுக்கு சமைக்கட்டும்.

* பன்னீர் சேர்க்கவும், நன்றாக கலக்கவும் (அதை உடைக்க வேண்டாம்)

* இப்போது மிளகு + சோம்பு தூள் சேர்க்கவும். இதை நன்றாக கலக்கவும்.

* சூடாக பரிமாறவும்.

## பசளி பயன்கள்



பசளி அல்லது பசளிக்கீரை என்பது வெப்பமண்டலத்தில் உள்ள பல்லாண்டுக் கொடித் தாவரமாகும். இது பொதுவாக இலைக் காய்கறியாக பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு மூலிகைத் தாவரமும் ஆகும்.இது வேகமாக வளரும், மெதுமையான தண்டுடனான கொடி கொண்ட, 10 மீட்டர் (33அடி) நீளம் கொண்டதாகும். இது தடிப்பான, அரை சதைப்பற்றுள்ள, கார மிகுதியற்ற, பிசுபிசுப்பு நூலியமைப்புக் கொண்ட இதய வடிவ இலையைக் கொண்டது. இதன் தண்டு கருஞ்சிவப்பு நிறமுடையது.பாலக் கீரை (அ) பசலைக்கீரை எளிதில் செரிமானமாகும் கீரைகளுள் ஒன்று. இந்த கீரை குளிர்ச்சி தரக்கூடியது. எரிச்சலைத் தணிக்கின்றது. இதில் தண்ணீரில் கரையக்கூடிய ஒரு வகைப் புரதச்சத்து உள்ளது. மேலும் வைட்டமின் 'ஏ', 'பி', 'சி ' ஆகியனவும், பொட்டாசிய உப்பின் காரச்சத்தும் அதிக அளவில் உள்ளன. இந்தக் கீரையில் முக்கியமான 10 நன்மைகள் பற்றி இங்கு காண்போம்.

பசலைக் கீரையில் இரும்பு சத்து அதிகம் உள்ளது, இதில் உள்ள இரும்புச் சத்து மிகவும் சுலபமாக ஜீரணமாகி உடம்பில் ஒட்டுகின்றது. எனவே ரத்த சோகை நோயாளிகளுக்கு அது மிகவும் பயன் தருகின்றது. பாலக் கீரையுடன் வேப்பிலை, ஓமம், மஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்து கஷாயமாக்கிச் சாப்பிட்டால் பெருவயிறு குறையும்.நீரிழிவு நோயாளிகளுக்கு இந்த கீரை மிகவும் சிறந்தது. ஏனெனில் இரத்ததில் உள்ள சர்க்கரையின் அளவை நிலையாக வைத்திருக்க இந்த கீரை உதவுகிறது.

புற்று நோய் செல்கள் உருவாகாமல் தடுத்து நிறுத்த கூடியது. பாலக் கீரை ரத்த சிவப்பு அணுக்களை அதிகமாக உற்பத்தி செய்வதால் இது அனிமீயா நோய் வராமல் தடுக்க உதவுகிறது.

பாலக் கீரையில் போலிக் ஆசிட் அதியளவில் உள்ளதால் கர்பிணிகள் இதனை அதிகம் எடுத்துக் கொண்டால் நல்லது.


குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் தாய்மார்கள் இந்த கீரையை அதிகம் சாப்பிட்டால் பால் அதிகம் சுரக்கும்.

இதில் மெக்னீசியம், ஜின்க், காப்பர் மற்றும் விட்டமின் - கே அதிகம் உள்ளதால் எலும்புகள் மற்றும் பற்கள் உறுதியாக உதவுகின்றன.

இந்த கீரையில் புரத சத்து நிறைந்துள்ளது, எனவே இந்த கீரையை தினமும் எடுத்து கொண்டால் மாரடைப்பு, ரத்த குழாய்கள் அடைப்பு போன்ற இதய நோய்கள் வராமல் தடுக்கலாம்.

கண் பார்வை நன்றாக தெரிய இந்த கீரை உதவி செய்கின்றன. பாலக்கீரையில் வைட்டமின் ஏ அதிக அளவில் உள்ளதால் இது கண்பார்வைக்கு மிகவும் சிறந்தது. கண் நோய்களான மாலைகண் நோய் மற்றும் கண்களில் ஏற்படும் அரிப்பு போன்றவை வராமல் தடுக்க வல்லது.

## பிக்பாஸ் புகழ் ஜூலிக்கு கோலாகலமாக திருமணம் முடிந்தது... வாழ்த்தும் ரசிகர்கள்



ஒருகாலத்தில் வெள்ளித்திரைக்கு செல்ல முக்கிய மேடையாக அமைந்து வந்தது சின்னத்திரை.

ஆனால் இப்போது வெள்ளித்திரையை விட சின்னத்திரைக்கு தான் மக்களிடம் மவுசு அதிகமாக உள்ளது, இது வேறு கதை.

கடந்த சில வருடங்களுக்கு முன் தமிழக மக்கள் ஒன்றாக கூடி ஜல்லிக்கட்டுக்காக போராட்டம் நடத்த அதன்மூலம் பிரபலமாகி விஜய் டிவியின் பிக்பாஸ் நிகழ்ச்சியில் என்ட்ரி கொடுத்தவர் தான் ஜூலி.

அந்த நிகழ்ச்சியின் மூலம் மோசமான பெயரை பெற்றவர் பின் தொகுப்பாளினியாக கலக்கி வந்தார். அப்படியே படங்கள் கமிட்டாகி நடித்தார், ஆனால் சரியான வரவேற்பு பெறவில்லை.

கடந்த வருட இறுதியில் பிக்பாஸ் புகழ் ஜூலி தனக்கு மொஹமத் இக்ரீம் என்பவருடன் நிச்சயதார்த்தம் நடந்ததாக புகைப்படத்துடன் அறிவித்தார்.

முதலில் திருமணம் செய்பவரின் புகைப்படம் வெளியிடவில்லை, பின் வெளியிட்டார்.

பிறகு திருமணத்திற்காக பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் என அனைவரையும் நேரில் சந்தித்து அழைப்பிதழ் கொடுத்து வந்தார்.

இந்த நிலையில் பிக்பாஸ் புகழ் ஜூலிக்கு கோலாகலமாக திருமணம் நடந்து முடிந்துள்ளது. மக்கள் அனைவரும் அவருக்கு வாழ்த்து கூறி வருகிறார்கள்.

## சினிமா



நடிகை சரண்யா மிகவும் அழகான உடையில் பொங்கல் ஸ்பெஷலாக எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

அந்த ஸ்டில்கள் அவரது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. இதோ பாருங்க.

## அஜித்தின் செயலால் கடுப்பான ரசிகர்கள்.. வைரலாகும் விளம்பர புகைப்படம்

உலகளவில் ரசிகர்களை கொண்டுள்ள உச்ச நட்சத்திரங்களில் ஒருவர் அஜித். இவர் நடிப்பில் அடுத்ததாக ஏகே 64 படம் உருவாகவுள்ளது.

மேலும் தற்போது கார் ரேஸில் கவனம் செலுத்தி வருகிறார். விரைவில் அஜித்தின் கார் ரேஸ் பற்றிய ஆவணத் திரைப்படம் வெளிவரும் என தகவல் வெளியாகியுள்ளது.

நடிகரும், கார் ரேசருமான அஜித், CAMPA எனர்ஜி டிரிங்க் விளம்பரத்தில் நடித்திருக்கும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகின்றன.

விளையாட்டு வீரர்கள் பலரும் இதுபோன்ற விளம்பரங்களில் நடிப்பதை தவிர்க்கும் நிலையில், அஜித் நடிப்பது ஏன் என்கிற கேள்வியை ரசிகர்கள் எழுப்பி வருகிறார்கள்.

மேலும் தனது படத்தின் விளம்பர நிகழ்ச்சிகளுக்கு வராத




அஜித், இதற்கு மட்டும் நடிக்க ஒப்புக்கொண்டது ஏன் என்றும் ரசிகர்கள் கேட்கிறார்கள்.

# மார்ச் மாதம் தொடங்கிக் கொண்டிருந்த புத்தாண்டை ஜூலியஸ் சீசர் ஜனவரியாக மாற்றியது ஏன்?

ஜனவரி 1, நேற்று உலகம் முழுவதும் மக்கள் புத்தாண்டை வரவேற்கின்றனர். இது இப்போதைய காலகட்டத்தில் இயல்பான ஒன்றாகத் தோன்றினாலும், எப்போதுமே இப்படி இருந்ததில்லை. உண்மையில், நவீன கால நாட்காட்டிகளின் மூலமாக இருக்கக்கூடிய பண்டைய ரோம் அதன் கால அளவுகோல்களில் ஆண்டின் முதல் மாதமாக ஜனவரியை கருதவில்லை. ஆம், அப்போது மார்ச் மாதம்தான் ஆண்டின் முதல் மாதமாகக் கணக்கிடப்பட்டது.
ஆண்டின் தொடக்கம் மார்ச் மாதத்தில் இருந்து ஜனவரி மாதத்திற்கு மாறியதன் பின்னணியில் நாட்காட்டி குழப்பங்கள், அரசியல் தேவைகள், வானியல் திருத்தங்கள் எனப் பல காரணிகள் பங்கு வகிக்கின்றன. ஜனவரி எப்போது, எப்படி ஆண்டின் முதல் மாதமாக மாறியது என்பதைப் புரிந்துகொள்ள, ரோமானிய நாட்காட்டி அடைந்த பரிணாம வளர்ச்சிகளை நாம் அறிய வேண்டும். அதில் அடுத்தடுத்து நிகழ்ந்த தவறுகள் எப்படி பெரிய சீர்திருத்தங்களைச் செய்வதற்கான உந்துதலாக அமைந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

### மார்ச் முதல் தொடங்கிய ரோமானிய ஆண்டுகள்

ஆரம்பக் கால ரோமானிய நாட்காட்டி சந்திரனின் சுழற்சிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதாக 'அவர் காலண்டர்: தி ஜூலியன் காலண்டர் அண்ட் இட்ஸ் எரர்ஸ்' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த நாட்காட்டியை நவீன கண்ணோட்டத்தில் பார்க்கும்போது உங்களுக்கு வினோதமாகத் தெரியலாம். அந்த நாட்காட்டியின்படி, மார்ச் மாதத்தில் இருந்து ஆண்டு தொடங்குகிறது. அதோடு, ஓர் ஆண்டுக்கு வெறும் 10 மாதங்கள் மட்டுமே இருந்தன.

அந்தப் பத்து மாதங்களில், ஆறு 30 நாட்களுடனும் நான்கு 31 நாட்களுடனும் இருந்துள்ளன. ஆண்டின் கடைசி மாதமாக டிசம்பர் இருந்துள்ளது.
மேக்ரோபியஸ், சென்சோரினஸ் போன்ற பண்டைய ரோமானிய தத்துவஞானிகளின் கூற்றுப்படி, ஓர் ஆண்டுக்கு பத்து மாதங்களும் 304 நாட்களும் மட்டுமே இருந்தன.

ரோமானிய நாட்காட்டியின்படி,
* மார்ச், மே, குயின்டிலிஸ், அக்டோபர் மாதங்கள் 31 நாட்களைக் கொண்டிருந்தன.
* ஏப்ரல், ஜூன், செக்ஸ்டிலிஸ், செப்டம்பர், நவம்பர், டிசம்பர் மாதங்கள் 30 நாட்களைக் கொண்டிருந்தன.

இந்த வரிசையில், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகியவை முறையே ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது மாதங்களாகக் கணக்கிடப்பட்டன. அதில் மொத்தம் 304 நாட்கள் இருந்தன. மேலும் வரலாற்றுப் பதிவுகளின்படி, அப்போது ஜனவரி, பிப்ரவரி என்ற மாதங்களே இருந்திருக்கவில்லை. அப்படியெனில் மீதி நாட்கள் என்னவாயின? அந்த நாட்காட்டியில் குளிர்காலம் கணக்கிடப்படவில்லை. ஆண்டின் அந்த இரு மாதங்களுக்கு விவசாயமே நடக்காது என்பதால், அந்த நாட்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சூரியன் உதித்தது, மறைந்தது. ஆனால், ஆரம்பக்கால நாட்காட்டியின்படி, அதிகாரபூர்வமாக ஒரு நாள்கூட கடக்கவில்லை. இந்தச் சிக்கலை, நாட்காட்டியில் நிலவிய குழப்பத்தை ரோமின் இரண்டாவது மன்னரான நூமா போம்பிலியஸ் நிவர்த்தி செய்ய முயன்றார்.

### ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் சேர்க்கப்பட்டது எப்படி?

ரோமானிய நாட்காட்டியில் நிலவிய இந்தக் குழப்பத்தைச் சரிசெய்ய,




நூமா போம்பிலியஸ்தான் ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களைச் சேர்த்தார். கடந்த 1921ஆம் ஆண்டு கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக பதிப்பகம் வெளியிட்ட 'தி காலண்டர்: இட்ஸ் ஹிஸ்டரி, ந்ச்சர் அண்ட் இம்ப்ரூவ்மென்ட்' என்ற நூல் இதுகுறித்துப் பேசுகிறது. அதன்படி, "நூமா கூடுதலாக 50 நாட்களைச் சேர்த்து, ஆண்டின் நாள் கணக்கை 354 நாட்களாக உயர்த்தியதாகக் கூறுகிறது. ஆனால், ரோமானியர்கள் இரட்டைப்படை எண்களை துரதிர்ஷ்டமானவை என்று நம்பினர்.
இதற்காக அவர் பல மாதங்களின் மொத்த நாள் கணக்கை 30இல் இருந்து 29 ஆகக் குறைத்து, கூடுதலாக 50 நாட்களைச் சேர்த்து 12 மாதங்கள் கொண்ட நாட்காட்டியை உருவாக்கினார்." ஜனவரி மாதத்தில் இரட்டைப்படை எண்ணிக்கையில் நாட்கள் இருந்ததால் கூடுதலாக ஒரு நாள் சேர்க்கப்பட்டது. பிப்ரவரி மாதம், பாதாள தெய்வங்களுடன் தொடர்புடையதாக இருந்ததால், அதற்கு இரட்டைப்படை எண்ணிக்கையில் நாட்கள் ஒதுக்கப்பட்டன. இந்தச் சீர்திருத்தத்தை செய்ததன் மூலம் போம்பிலியஸ் ஆண்டின் நாள் கணக்கை 355 ஆக உயர்த்தினார்."
கி.மு.700ஆம் ஆண்டு வாக்கில், நூமா போம்பிலியஸ் ஆட்சியின்போது ரோமானிய ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு புதிய மாதங்கள் சேர்க்கப்பட்டன. ஜனவரி ஆண்டின் தொடக்கத்திலும், பிப்ரவரி ஆண்டின் இறுதியிலும் சேர்க்கப்பட்டன.

### குழப்பத்தில் தத்தளித்த ரோமானிய நாட்காட்டி

ஒரு நாட்காட்டி சரியாகச் செயல்படுவதற்கு, சிவில் ஆண்டுக் கணக்கு சூரிய ஆண்டுடன் பொருந்தி வரவேண்டும். அப்போதுதான் ஒவ்வோர் ஆண்டிலும் பருவ காலங்கள் ஒரே நேரத்தில் திரும்ப வரும்.
சிவில் ஆண்டு நீளமாக இருந்தால், பருவகாலங்கள் மெதுவாகப் பின்னோக்கி நகரும். அதுவே மிகக் குறுகியதாக இருந்தால், பருவகாலங்கள் வேகமாக முன்னோக்கி நகரும்.

'அவர் காலண்டர்: தி ஜூலியன் காலண்டர் அண்ட் இட்ஸ் எரர்ஸ்' நூலின்படி, "பண்டைய எகிப்தியர்கள் ஆண்டுக்கு 12 மாதங்களையும், மாதத்திற்கு 30 நாட்களையும் கொண்ட எளிய முறையைப் பயன்படுத்தினர். அதோடு, ஆண்டின் இறுதியில் கூடுதலாக ஐந்து நாட்களைச் சேர்த்தனர்.
ஆனால் அவர்கள் மிகுநாளாண்டு (Leap year) முறையைப் பின்பற்றாத காரணத்தால், ஒவ்வோர் ஆண்டும் கால் பங்கு நாளின் கணக்கு தவறியது. இதன் விளைவாக எகிப்திய புத்தாண்டு ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு நாட்களில் வந்தது. இதனால் எகிப்திய நாட்காட்டி நிலையற்றதாக இருந்தது."
இதுவே ரோமானிய நாட்காட்டியை எடுத்துக்கொண்டால், வேறொரு பிரச்னை நிலவியது. நூமா மாதங்களை பன்னிரண்டாக மாற்றி, ஆண்டுக்கு 355 நாட்கள் கொண்ட நாட்காட்டியை கொண்டு வந்தார். இருந்தாலும், இதன்படியான ஆண்டுக் கணக்கு சூரிய ஆண்டைவிட சுமார் 10 நாட்கள் குறைவாக இருந்தது.

இதைச் சரிசெய்யவில்லை என்றால் ஒவ்வோர் ஆண்டும் பருவங்களின் காலம் மாறிக்கொண்டே இருக்கும். இதற்கு நூமா ஒரு தீர்வைக் கொண்டு வந்தார். அதாவது மற்றுமொரு புதிய மாதத்தை இடைச்செருகலாக சேர்த்தார். இந்தப் புதிய மாதம், பிப்ரவரி 23 மற்றும் 24ஆம் தேதிக்கு இடையே சேர்க்கப்பட நூமா உத்தரவிட்டார். இந்த இடைச்செருகல் மாதத்தில் ஓர் ஆண்டில் 22 நாட்கள், மற்றோர் ஆண்டில் 23 நாட்கள் என மாறி மாறி இருந்து வந்தது. இதனால், நான்கு ஆண்டுகளில் 1420 நாட்களுக்குப் பதிலாக மொத்தம் 1,465 நாட்கள் உருவாயின. அதாவது, சராசரி ஆண்டின் நாட்கள் எண்ணிக்கையை 366¼ நாட்கள் என்றானது. இதன் விளைவாக, சூரிய ஆண்டைவிட ஒரு நாள் கூடுதலாகக் கணக்கிடப்படும் நிலை உருவானது.

பின்னர், இந்தப் புதிய பிழையைச் சரிசெய்ய, ஒவ்வொரு மூன்றாவது எட்டு ஆண்டு காலத்திலும் நான்கு இடைச்செருகல் மாதங்களுக்குப் பதிலாகத் தலா 22 நாட்களைக் கொண்ட மூன்று இடைச்செருகல் மாதங்கள் மட்டுமே இருக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இது 24 ஆண்டுகளில் 24 நாட்களைக் குறைத்து, சராசரி ஆண்டை 365¼ நாட்களாகக் குறைத்து, நாட்காட்டி கணக்கீட்டை சூரிய ஆண்டுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வந்தது.
கோட்பாட்டின்படி, இந்த அமைப்பு நன்றாகச் செயல்பட்டிருக்க முடியும். ஆனால் நடைமுறையில் இந்த இடைச்செருகல்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் மதகுருமார்களிடம் இருந்தது. அவர்கள் அரசியல் காரணங்களுக்காக அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினர். ஒரு நீதிபதியின் பதவிக்காலத்தை நீட்டிக்க ஆண்டில் ஓர் ஆண்டின் காலகட்டத்தை நீட்டிப்பது, தேர்தல்களை விரைவுபடுத்த ஆண்டை சுருக்குவது போன்றவற்றில் ஈடுபட்டனர். இத்தகைய தந்திரங்களின் விளைவாக, ரோமானிய நாட்காட்டி பெரும் குழப்பத்தில் சிக்கித் தத்தளித்தது.

### மீண்டும் மார்ச் மாதமாக மாறிய ஆண்டு தொடக்கம்

"ஓவிட் என்ற ரோமக் கவிஞரின் கூற்றுப்படி, நூமா போம்பிலியஸ் கொண்டு வந்த நாட்காட்டி முறை கி.மு.452 வரை பயன்பாட்டில் இருந்தது" என்று தி காலண்டர்: இட்ஸ் ஹிஸ்டரி, ஸ்டிரக்ச்சர் அண்ட் இம்ப்ரூவ்மென்ட் என்ற புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. பின்னர், "டிசெம்வீர் என்று அழைக்கப்படும் பத்து ரோமானிய நீதிபதிகள் அடங்கிய குழு மீண்டும் மாதங்களின் வரிசையை மாற்றி மார்ச் மாதத்தையே முதல் மாதமாக நிர்ணயித்தது." இதன் மூலம் நூமாவுக்கு முன்பு பயன்பாட்டில் இருந்த பழைய மரபுக்கே ரோம் திரும்பியது. ஆனால், இந்தத் திருத்தங்களும்கூட நாட்காட்டியில் நிலவிய ஆழமான சிக்கலைத் தீர்க்கவில்லை, குழப்பம் தொடர்ந்தது.
ஜூலியஸ் சீசரின் காலப்பகுதியில், சூரிய ஆண்டுக்கும் ரோமானிய நாட்காட்டி படியான ஆண்டுக்கும் இடையே சுமார் மூன்று மாதங்கள் வேறுபாடு இருந்தது. குளிர்காலம் இலையுதிர் காலத்திலும், இலையுதிர் காலம் கோடைக்காலத்திலும் வந்தன. இப்படியாக வளர்ந்து வந்த குழப்பம், நாட்காட்டியை முற்றிலுமாகச் சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது.
வானியலாளரும் காலக்கணிப்பு வல்லுநருமான அலோய்சியஸ் லிலியஸ் இதற்குத் தீர்வாக ஒரு திட்டத்தை முன்வைத்தார். அதற்கு, 1582 பிப்ரவரி 24ஆம் தேதியன்று போப் 13ஆம் கிரிகோரி ஒப்புதல் வழங்கினார்.
அந்த ஒப்புதல் படிவத்தின்படி, நாட்காட்டியை சரி செய்வதற்காக பத்து நாட்கள் நீக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 1582ஆம் ஆண்டில் அக்டோபர் 4ஆம் தேதிக்குப் பிறகு வந்த நாள் 15ஆம் தேதியாகக் குறிப்பிடப்பட்டது என்று அலெக்சாண்டர் பிலிப் தனது நூலில் எழுதியுள்ளார்.
இப்படியாக, ஆரம்பக்கால ரோமில் மார்ச் மாதத்தில் தொடங்கிய புத்தாண்டு, நூமா, சீசர், 13ஆம் கிரிகோரி ஆகியோரின் காலத்தில் ஜனவரிக்கு மாற்றப்பட்டு, இன்றளவும் ஜனவரியே புத்தாண்டு மாதமாக நீடித்து வருகிறது.



சிவசக்தி
நாப்பிராம்பட்டி
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

# தினம் ஒரு தலைவர்கள்
# சூரியா சென் வரலாறு

சூரியா சென் (22 மார்ச் 1894 - 12 சனவரி 1934) பிரித்தானிய இந்தியாவின் வங்காளத்தில் உள்ள சிட்டகாங் நகரத்தில் பிறந்த இந்திய விடுதலை இயக்க வீரர் ஆவார். பிரித்தானிய இந்திய அரசுக்கு எதிராக, 1930-இல் சிட்டகாங் ஆயுத கிடங்கை சூறையாடும் புரட்சியில் ஈடுபட்டதன் மூலம் அறியப்பட்டவர். சிட்டகாங் நகரத்தில் சூரியா சென் ஆசிரியராக பணியாற்றியவர். வங்காள மக்கள் சூரியா சென்னை மாஸ்டர் என்று மரியாதையுடன் அழைத்தனர். முர்சிதாபாத் மாவட்டத்தின் தலைமையிட நகரமான பெஹரம்பூரில் 1916-இல் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே இந்திய விடுதலை இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்.

இளமை வாழ்க்கை
சூரியகுமார் சென் 22 மார்ச் 1894-இல் சிட்டகாங் பகுதியில் உள்ள நவபரா கிராமத்தில் பிறந்தவர். இவரது தந்தை இரமணிரஞ்சன் சென் பள்ளிக்கூட ஆசிரியர் ஆவார். சூரியகுமார் சென் கல்லூரி படிப்பின் போதே இளைஞர்களின் புரட்சிகர அமைப்பான அனுசீலன் சமிதியில் சேர்ந்தார். கல்லூரி படிப்பு முடிந்த பின் சிட்டகாங் மாவட்டத்தில் உள்ள நந்தன்கனான் பகுதியில் அமைந்த தேசியப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.
சிட்டகாங் ஆயுத கிடங்கு சூறையாடல்
சூரியா சென் தனது புரட்சிகர குழுவினருடன் 18 ஏப்ரல் 1930 அன்று சிட்டகாங் நகரத்தில் உள்ள காவல்துறையினரின் ஆயுத கிடங்கை சூறையாட திட்டமிட்டார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற இவரது தலைமையிலான குழு ஒன்று முதலில் தொலைபேசி, தந்தி மற்றும் தொடருந்து வசதிகளை செயலிழக்க செய்தித் தொடர்பு அமைப்புகளை முற்றிலும் அழித்து விட்டனர். இதனால் சிட்டகாங் நகரம் நாட்டின் பிற பகுதிகளுடன் செய்தித் தொடர்பு வசதிகளை இழந்தது. சூரியா சென் குழுவினர் ஆயுத கிடங்கில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிய பின்னர் ஆயுத கிடங்கை சூறையாடினர்.
பிரித்தானியக் காவல் துறையினருக்கும் புரட்சிகர குழுவினருக்கும் இடையே நடந்த மோதலில் பன்னிரண்டு இந்திய விடுதலை இயக்கத்தினர் இறந்தனர், பலர் கைது செய்யப்பட்டனர், சூரியா சென்னும் மற்றும் சிலரும் அங்கிருந்து ஓடி மறைந்து விட்டனர். சூரியா சென்னின் கைதும் மரணமும்








சூரியா சென்னை தூக்கிலிட்ட தூக்கு மேடை, சிட்டகாங், வங்காளதேச அரசு அதனை வரலாற்று நினைவிடமாக அறிவித்துள்ளது.
சூரியா சென் பிரித்தானிய காவல்துறையிடம் அகப்படாது தலைமறைவாக இருந்து கொண்டே இந்திய விடுதலை இயக்கத்திற்குப் புத்துணர்வு ஊட்டிக்கொண்டே இருந்தார். ஒரு முறை அவரது உறவினரான நேத்திரா சென் என்பவரின் வீட்டில் தலைமறைவாக இருந்த போது, பிப்ரவரி 1933 இல் பிரித்தானியக் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்.

சூரியா சென்னைத் தூக்கில் இடுவதற்கு முன்பாக, அவரது ஒவ்வொரு பற்களையும் குறடால் பிடுங்கி எறிந்தனர். பின்னர் கால்கள் மற்றும் கைகளில் உள்ள அனைத்து மூட்டெலும்புகளை சுத்தியால் உடைத்தனர். உணர்விழந்த நிலையில் இருந்த சூரியா சென்னை தூக்கு மேடையில் ஏற்றினர்.
அவரது இறப்பிற்குப் பின் சடலத்தை தடிமனான இரும்புப் பெட்டியில் வைத்து, பிரித்தானிய காவல் துறையினர், வங்காள விரிகுடாவில் எறிந்தனர்.
பிரபல கலாச்சாரத்தில் கருத்தோவியம்
இந்திய திரைப்பட இயக்குநர் அசுதேஷ் கவுரிகர் 2010-ஆம் ஆண்டில் கேலின் ஹம் ஜி ஜான் சே எனும் திரைப்படத்தில் சூரியா சென்னின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இத்திரைப்படத்தில் அபிஷேக் பச்சன் சூரியா சென்னாக நடித்துள்ளார்.

சூரியா சென் நடத்திய சிட்டகாங் ஆயுதக் கிடங்கி சூறையாடல் நிகழ்வை விளக்கும் வகையில், 2012-ஆம் ஆண்டில் தேவவிரத பெயின் என்பவர் இயக்கிய சிட்டகாங் எனும் திரைப்படத்தில் மனோஜ் வாஜ்பாய் என்ற திரைப்பட நடிகர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# கோழிக்கோடு கடற்கரையில் கஞ்சா வைத்திருந்த நபர் கைது

**திருவனந்தபுரம், ஜன.18:**

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள பிரபலமான கடற்கரைக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், கோழிக்கோடு கடற்கரையில் உள்ள சாலையில் ஒரு நபர் கஞ்சாவுடன் உறங்கிக்கொண்டிருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், முகமது ரபிக் (வயது 39) என்ற நபரை கைது செ ய்தனர். அவரிடமிருந்து 300 கிராம் எடையுள்ள கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டவிரோத வாக்கி-டாக்கி விற்பனை; மெட்டா, அமேசான் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு அபராதம்

**புதுடெல்லி, ஜன.18:**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 மற்றும் தொலைத்தொடர்பு சட்டங்களை மீறி, அங்கீகரிக்கப்படாத வாக்கி-டாக்கிகளை சட்டவிரோதமாக விற்பனை செய்ததற்காக, மத்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (CCPA), எட்டு நிறுவனங்களுக்கு எதிராக இறுதி உத்தரவுகளை பிறப்பித்து, மொத்தம் ரூ.44 லட்சம் அபராதம் விதித்துள்ளது. முன்னதாக இது குறித்து ஜியோமார்ட், சிமியா, டாக் ப்ரோ, மீஷோ, மாஸ்க்மேன் டாய்ஸ், டிரேட்இந்தியா, அன்ட்ரிக்ஷ் டெக்னாலஜிஸ், வர்தான்மார்ட், இந்தியாமார்ட், மெட்டா(பேஸ்புக்), பிளிப்கார்ட், கிருஷ்ணா மார்ட் மற்றும் அமேசான் ஆகிய 13 ஆன்லைன் வணிக நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த தளங்களில் 16,970-க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்படாத பொருட்களின் பட்டியல்கள் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, நுகர்வோர் உரிமைகளை மீறியதற்காக மீஷோ, மெட்டா, பிளிப்கார்ட் மற்றும் அமேசான் ஆகிய 4 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சமும், சிமியா, ஜியோமார்ட், டாக் ப்ரோ மற்றும் மாஸ்க்மேன் டாய்ஸ் ஆகிய 4 நிறுவனங்களுக்கு தலா ரூ.1 லட்சமும் அபராதம் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார செயலாளர் நிதி காரே தெரிவித்துள்ளார்.

# ஐதராபாத்தில் வெப்பக்காற்று பலூன் திருவிழா தொடக்கம்

**ஐதராபாத், ஜன.18:**

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கோல்கொண்டா கோட்டை அருகே உள்ள கோல்ப் விளையாட்டு மைதானத்தில், வெப்பக்காற்று பலூன் திருவிழா இன்று தொடங்கியது. இந்த விழாவை மாநிலம் சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை மந்திரி ஜூபள்ளி கிருஷ்ண ராவ் தொடங்கி வைத்தார். தொடர்ந்து அவர் வெப்பக்காற்று பலூனில் ஏறி சுமார் 13 கி.மீ. தூரத்திற்கு ஒன்றரை மணி நேரம் பயணம் செய்தார். கோல்கோண்டா கோல்ப் மைதானத்தில் தொடங்கி, அப்பாஜிகுடா பகுதி வரை வெப்பக்காற்று பலூனில் பயணம் செய்த அவர், அங்குள்ள நிலப்பரப்பை வான்வழியாக பார்வையிட்டார். இந்த பயணத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜூபள்ளி கிருஷ்ண ராவ், "இது ஒரு மறக்க முடியாத அனுபவம். இந்த வெப்பக்காற்று பலூன் திருவிழா மாநிலத்தின் சுற்றுலாத் துறையில் முக்கியமான அத்தியாயம்" என்று குறிப்பிட்டார். இந்த பலூன் திருவிழா, 18-ந்தேதி வரை நடைபெற உள்ளது. இதில் சர்வதேச தரத்திலான 15 வெப்பக்காற்று பலூன்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் லாட்டரியில் ரூ.1 கோடி பரிசு வென்றவர் கடத்தல்: போலீசார் வலைவீச்சு

**கண்ணூர், ஜன.18:**

கேரளாவின் கண்ணூர் மாவட்டம் பரவூரை சேர்ந்த சாதிக் (வயது46) என்பவருக்கு கடந்த மாதம் 30-ந்தேதி லாட்டரியில் ரூ.1 கோடி பரிசு விழுந்தது. அந்த பணம் கிடைப்பதற்கு தாமதம் ஆகும் என்பதாலும், கணிசமான தொகை வரியாக பிடிக்கப்படும் என்பதாலும் தனது டிக்கெட்டை அதிக தொகைக்கு விற்பனை செய்ய சாதிக் முயன்றார். இதையறிந்த கும்பல் ஒன்று அவரிடம் இருந்து அதிக தொகைக்கு லாட்டரி டிக்கெட்டை பெற்றுக்கொள்வதாக கூறி சாதிக்கை பரவூர் நகருக்கு வரவழைத்தனர். அதை நம்பி தனது நண்பருடன் சாதிக் அங்கு சென்றார். அப்போது ஒரு வாகனத்தில் வந்த அந்த கும்பல் இருவரையும் வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றிக்கொண்டு சென்றனர். சிறிது தூரம் சென்றபிறகு சாதிக்கின் நண்பரை இறக்கி விட்ட அவர்கள், சாதிக்கை கடத்திச்சென்றனர். பின்னர் அந்த லாட்டரி டிக்கெட்டை பறித்துக்கொண்டு இரவு 11.30 மணியளவில் சாதிக்கை இறக்கி விட்டனர். இதைத்தொடர்ந்து சாதிக் தனக்கு நேர்ந்த துயரம் குறித்து போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் அந்த கும்பலை சேர்ந்த ஒருவரை கைது செய்தனர். மற்றவர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# கடந்த ஆண்டு சாலை விபத்துகளில் 649 பாதசாரிகள் உயிரிழப்பு; 1,738 பேர் காயம்!

**புதுடெல்லி,ஜன.18:**

2025-ஆம் ஆண்டில் 2,000- க்கும் மேற்பட்ட சாலை விபத்துகளில் 649 பாதசாரிகள் உயிரிழந்ததாகவும், 1,738 பேர் காயமடைந்ததாகவும் தில்லி போக்குவரத்துக் காவல்துறை வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

இதுநகரத்தின்சாலைகளில்கால்நடையாகபயணிக்கும் பயணிகள் எவ்வளவு பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. போக்குவரத்துக் காவல்துறை புள்ளிவிவரங்களின்படி, இதுபோன்ற பாதசாரி இறப்புகளில் 771 விபத்துகளில் 330 இறப்புகள் கடந்த ஆண்டு அடையாளம் காணப்படவில்லை. தனியார் கார்கள் இரண்டாவது பெரிய பங்களிப்பை அளித்தன. 477 விபத்துகளில் 92 பாதசாரிகள் இறந்தனர். அதைத் தொடர்ந்து 472 விபத்துகளில் இரு சக்கர வாகனங்கள் ஈடுபட்டன. இதன் விளைவாக 75 பாதசாரிகள் இறந்தனர்.

# ஓரிரு மாதங்களில் ஸ்மார்ட்போன், டிவி, லேப்டாப் விலைகள் உயர வாய்ப்பு

**புதுடெல்லி, ஜன.18:**




அடுத்து வரும் ஒரு சில மாதங்களில், ஸ்மார்ட்ஃபோன், தொலைக்காட்சி, லேப்டாப் போன்றவற்றின் விலைகள் 4 - 8 சதவிகிதம் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இதன் விலைகள் ஏற்கனவே உயர்ந்தள்ளதாகவும், இது அடுத்து வரும் மாதங்களிலும் நீடிக்கும் என்றும், தொழிற்சாலை நிர்வாகிகள் மற்றும் சந்தை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் உயர் செயல்திறன் கொண்ட கணினி தொழில்நுட்பங்களை அப்டேட் செய்வது அதிகரித்து வருவதால் மெமரி சிப்களுக்கான தேவை அதிகரித்து அதன் எதிரொலியாக விலை உயர்வு என்ற அபாயத்தை ஸ்மார்ட்போன் தயாரிப்பாளர்கள் ஏற்கனவே சந்தித்து வருகிறார்கள்.

இதன் காரணமாக, தொலைக்காட்சி, ஸ்மார்ட்போன்கள், லேப்டாப் போன்றவற்றின் விலைகளும் உயரும் என்றும், இந்த விலை உயர்வு என்பது, காலாண்டுக்கு ஒருமுறை அல்லது மாதந்தோறும் என்ற அடிப்படையில் இருக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துடன் ஒப்பிட்டால், வரும் மார்ச் மாதத்துக்குள் மெமரி சிப் விலைகள் 120 சதவிகிதம் உயரக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. எனவே, தொலைக்காட்சி, லேப்டாப் போன்றவற்றை வாங்க திட்டமிட்டுள்ளவர்கள் உடனடியாக வாங்குவது நலம் என்கிறார்கள் சந்தை நிபுணர்கள். ஏற்கனவே, இந்த விலை உயர்வின் எதிரொலியாக பல முன்னணி நிறுவனங்கள் சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளைக் குறைத்து வருகிறது. ஒரு பக்கம் விலை உயர்வு, விற்பனையைக் குறைக்கும். மெமரி சிப்களின் விலை உயர்வு, உற்பத்திச் செலவை அதிகரிக்கும். இந்த சுமையை நிறுவனங்கள் நுகர்வோர் மீதுதான் சுமத்துக்கும் நிலை ஏற்படும். எனவே, எங்கோ ஓரிடத்தில் மெமரி சிப்களின் தேவை அதிகரிப்பு, நேரடியாக மக்களை பாதிக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

# திரிணமூல் எம்.பி.க்களுக்கு எதிரான புகார்: மாநிலங்களவை உரிமை மீறல் குழு ஆய்வு

**புதுடெல்லி, ஜன.18:**

மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி எம்.பி. மம்தா தாக்கூர் மற்றும் அக் கட்சியின் முன்னாள் எம்.பி. மௌசம் நூர் ஆகியோருக்கு எதிரான நாடாளுமன்ற உரிமை மீறல் மற்றும் அவமதிப்பு புகாரை மாநிலங்களவை உரிமை மீறல் குழு ஆய்வு செய்ய உள்ளது.

மாநிலங்களவைச் செயலகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில், 2005-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்ட சட்டத்துக்கு மாற்றாக, புதிதாக 'பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புச் சட்ட மசோதாவை' (விபி-ஜி ராம் ஜி) மத்திய அரசு கொண்டுவந்தது. இந்த மசோதா மீது டிசம்பா 18, 19-ஆம் தேதிகளில் மாநிலங்களவையில் விவாதம் நடத்தப்பட்டபோது, மம்தா தாக்கூா, மௌசம் நூா இருவரும் அவையை சுமுகமாக நடைபெற விடாமல் கடும் அமளியில் ஈடுபட்டதோடு, நாடாளுமன்ற நெறிகளுக்குத் தகாத சொற்களைப் பேசினா. அவையின் மையப் பகுதிக்கு வந்து அமளியில் ஈடுபட்ட மாநிலங்களவை ஊழியா்கள் பணி செய்ய இயலாமல் இடையூறு விளைவித்தனா். இதுதொடா்பாக பாஜக எம்.பி. லட்சுமிகாந்த் பாஜ்பாய் தரப்பில் புகாா மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவைப் பரிசீலித்த மாநிலங்களவைத் தலைவா, அவை நடைமுறைகள் விதி எண்.203-இன் கீழ் இந்த புகாா தொடா்பாக மாநிலங்களவை உரிமை மீறல் குழு ஆய்வு செய்து, அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டாா' என்று தெரிவிக்கப்பட்டது.

# மாஞ்சா நூல் கழுத்தை அறுத்து சைக்கிளில் சென்ற சிறுவன் பலி



**காந்திநகர், ஜன.18:**

குஜராத் மாநிலம் சூரத் மாவட்டம் ஜஹாங்கீராபாத் பகுதியை சேர்ந்தவர் அமோல் போர்சி. இவரது மகன் ரஹனேஷ் (வயது 8).

இந்நிலையில், சிறுவன் ரஹனேஷ் இன்று தனது நண்பர்களுடன் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் சைக்கிளில் சென்றுள்ளான். அப்போது, அப்பகுதியில் பட்டத்தில் உள்ள மாஞ்சா நூல் சிறுவன் ரஹனேசின் கழுத்தை அறுத்துள்ளது. இந்த சம்பவத்தில் சிறுவனுக்கு படுகாயம் ஏற்பட்டது.

உடனடியாக, சிறுவனை மீட்ட அப்பகுதி மக்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் ரஹனேஷ் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குஜராத்தில் நேற்று மகர சங்கராந்தி பண்டிகை கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது பட்டம் விடுவது வழக்கமாகும். அவ்வாறு விடப்பட்ட பட்டத்தில் இருந்து மாஞ்சா நூல் கழுத்தை அறுத்து ரஹனேஷ் உயிரிழந்துள்ளான் என போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# அமெரிக்கா – பாக். கூட்டு ராணுவப் பயிற்சி விஸ்வகுருவுக்கு பின்னடைவு! – மோடி அரசின் மீது காங்கிரஸ் தாக்கு!

**புதுடெல்லி, ஜன.18:**



அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இணைந்து கூட்டு ராணுவப் பயிற்சி மேற்கொண்டது, பிரதமர் நரேந்திர மோடியின் அரசுக்கு மற்றொரு பின்னடைவு என காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.

கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பப்பி நகரத்தில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு மையத்தில் நடைபெற்ற "இன்ஸ்பயர்ட் கேம்பிட் 2026" எனும் பயிற்சியில் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் ராணுவங்கள் இணைந்து கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து, இது பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு மற்றொரு பின்னடைவு என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

இதுகுறித்து, அவரது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில் கூறப்பட்டதாவது:

"தன்னைத்தானே விஸ்வகுருவாக அறிவித்துக்கொண்ட வரின் (பிரதமர் மோடி) ராஜதந்திரங்களுக்கு ஏற்பட்ட மற்றொரு பின்னடைவு. பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க ராணுவ வீரர்கள் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தான் அசாதாரணமான கூட்டாளி, என கடந்த 2025 ஜூன் மாதம் அமெரிக்காவின் அப்போதைய ராணுவ உயர் அதிகாரி ஜெனரல் மைக்கல் குனிலா கூறியிருந்தார். பஹல்காம் தாக்குதல்களுக்கு முக்கிய காரணமாக இருந்து, வன்முறைகளைத்தூண்டக்கூடிய கருத்துகளைத் தெரிவித்த பாகிஸ்தானின் ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீரை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பலமுறை பாராட்டியுள்ளார்." எனக் கூறியுள்ளார். இத்துடன், இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் தனது தலையீட்டால் நிறுத்தப்பட்டன என அதிபர் டிரம்ப் மீண்டும் கூறியுள்ளதையும் ஜெய்ராம் ரமேஷ் அவரது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தனித்தேர்வர்கள் கவனத்துக்கு! சிபிஎஸ்இ 10, 12ஆம் வகுப்புக்கான தேர்வு நுழைவுச் சீட்டு!

**புதுடெல்லி, ஜன.18:**



10, 12-ஆம் வகுப்புகளுக்கான 2026-ஆம் ஆண்டு பொதுத் தேர்வு தொடங்கவிருக்கும் நிலையில், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) பொதுத் தேர்வு எழுதும் தனித்தேர்வர்களக்கான நுழைவுச் சீட்டினை வெளியிட்டுள்ளது.

இந்த நுழைவுச் சீட்டானது, தனித்தேர்வர்கள் எழுதும் பாடம், அதில் பெற வேண்டிய மதிப்பெண்கள் என அனைத்தும் இடம்பெற்றதாக இருக்கும்.

இந்த தனித்தேர்வர்கள் என்பவர்கள், பள்ளியில் சேர்க்கை பெறாமல், தேர்வெழுத மட்டும் விண்ணப்பித்திருப்பவர்கள் ஆவர். அதாவது, கடந்த ஆண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட பாடங்களில் தோல்வியடைந்து, அனைத்துத் தேர்வுகளையும் மீண்டும் எழுதி நல்ல மதிப்பெண் பெற நினைப்பவர்கள், தேர்ச்சி பெற்று ஆனால் குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள், மீண்டும் தேர்வெழுதி நல்ல மதிப்பெண் பெற நினைப்பவர்கள் போன்றவர்கள் தனித்தேர்வர்களாகக் கருதப்படுகிறார்கள்.

10, 12-ஆம் வகுப்புகளுக்கான 2026-ஆம் ஆண்டு பொதுத் தேர்வு அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் நிலையில், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) தனித் தேர்வர்களுக்கு நுழைவுச் சீட்டினை வெளியிட்டிருக்கும் நிலையில், பள்ளி மாணவர்களுக்கும் விரைவில் நுழைவுச் சீட்டினை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளுக்கான நுழைவுச் சீட்டு வெளியானதும், மாணவர்கள் WWW.CBSE.NIC.IN அல்லது WWW.CBSE.GOV.IN என்ற அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# பிரம்மாண்டமான தடையற்ற வா்த்தக ஒப்பந்தம் : அமைச்சா் பியூஷ் கோயல்

**புதுடெல்லி, ஜன.18:**

இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வாத்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தில் இருப்பதாக வெள்ளிக்கிழமை தெரிவித்த இந்திய வா்த்தக துறை அமைச்சா் பியூஷ் கோயல், எப்போதும் கண்டிராத அளவுக்கு பிரம்மாண்டமானதாக இருக்கும் என்றும் வா்ணித்தாா்.

இது தொடா்பாக செய்தியாளா்களிடம் அவா் கூறியதாவது: 2014-ஆம் ஆண்டு முதல், பாஜக தலைமையிலான என்டிஏ அரசு, ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஓமன், நியூசிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய தடையற்ற வாத்தக கூட்டமைப்பு மற்றும் மோரீஷஸ் ஆகியவற்றுடன் 7 வாத்தக ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. இந்நிலையில், பிரான்ஸ், ஜொ்மனி, ஸ்பெயின், இத்தாலி, ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, அயா்லாந்து, நெதா்லாந்து, போா்ச்சுகல், போலந்து, டென்மாா்க், ஸ்வீடன் உள்பட 27 வளாந்த நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா ஒப்பந்தம், இதுவரை இறுதி செய்யப்பட்டதிலேயே மிக பிரம்மாண்டமானதாக இருக்கும். இரு தரப்பினருக்கும் பரஸ்பர நன்மையை இது பயக்கும்.

மேலும், இந்திய ஏற்றுமதித் துறைகளுக்கு இது சிறந்ததாக அமையும் என்றாா். இந்தியாவின் 77-ஆவது குடியரசு தின கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினா்களாக ஐரோப்பிய கவுன்சில் தலைவா் அன்டோனியோ லூயிஸ் சாண்டோஸ் டகோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவா உா்சுலா வான் டொ லேயன் ஆகியோா் பங்கேற்க உள்ளனா்.

# இந்தூரில் மாசடைந்த குடிநீரால் பாதிக்கப்பட்டோரை சந்தித்த ராகுல்!

**இந்தூர், ஜன.18:**

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில், மாசடைந்த குடிநீரைக் குடித்த பலர் பலியான நிலையில், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரை, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

இந்தூரின் பகீரதபுரத்தில் நர்மதா ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை குடித்த உள்ளூர்வாழ் மக்களுக்கு, கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதில் சிலர் சிகிச்சை பலனின்றி பலியாகினர். பாம்பே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை ராகுல் காந்தி நேரில் சந்தித்து அவர்களது உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களையும் நேரில் பார்த்தார். அவர்களது குடும்பத்தினரிடம், உடல்நலம் தேறி வருவது குறித்து கேட்டறிந்தார். சில மணி நேரம் அவர்களது குடும்பத்தினரிடம் ராகுல் காந்தி உரையாடினார்.

மேலும், மாசடைந்த குடிநீர் விநியோகிக்கப்பட்ட பகுதிகளுக்கும் சென்று, அங்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் நேரில் சந்தித்து பேசுகிறார். பிறகு, இந்தூர் விமான நிலையம் சென்று அங்கிருந்து அவர் தில்லி திரும்புகிறார்.

இந்தூரின் பகீரதபுரத்தில் நர்மதா ஆற்றிலிருந்து குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரை குடித்த உள்ளூர்வாழ் மக்களுக்கு, கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 20 பேர் சிகிச்சை பலனின்றி பலியாகினர். ஏராளமானோர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. நாட்டின் சுகாதாரமான நகரம் என அறியப்படும் இந்தூரில் பாதிக்கப்பட்ட பகுதி மக்களை நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளார் ராகுல் காந்தி.

# டெல்லியில் குளிர் அலை பரவல்; விமான சேவை பாதிப்பு

**புதுடெல்லி, ஜன.18:**

டெல்லியின் பல்வேறு நகரங்களிலும் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்தே கடுமையான குளிர்ச்சி நிலவுகிறது. நகரின் பல்வேறு பகுதிகளிலும் குறைந்தபட்ச வெப்பநிலை 3 டிகிரி என்ற அளவுக்கு குறைந்து காணப்படுகிறது. பாலம், சப்தர்ஜங், டெல்லி-என்.சி.ஆர்., இந்தியா கேட் உள்ளிட்ட பல்வேறு நகரங்களும் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

இது தவிரவும் முக்கிய நகரங்களில் காற்று மாசும் அதிகரித்து உள்ளது. தெளிவற்ற வானிலையும் காணப்படுகிறது. இதனால், டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் சில விமானங்களின் வருகையில் தாமதம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதன்படி, டொரண்டோ, துபாய், மான்செஸ்டர், லண்டன், பாங்காக், பிளிசி, பாகு, கெய்ரோ, மிலன், கோபன்ஹேகன் போன்ற முக்கிய வெளிநாட்டு நகரங்களில் இருந்து டெல்லிக்கு வர கூடிய விமானங்கள் தாமதமாகி உள்ளன. இதனால் இடையூறுகள் ஏற்படக்கூடும் என்றும் பயணிகளுக்கு அறிவுறுத்தல் வெளியிடப்பட்டு உள்ளது.




## கஞ்சா போதை: நடுரோட்டில் 2 இளைஞர்கள் அடித்துக்கொலை

**திருவள்ளூர், ஜன 18:** திருவள்ளூர் மாவட்டம் மணவாளநகர் ஒட்டிக்குப்பம் பகுதியை சேர்ந்தவர் பார்த்திபன்(வயது 32). இவர் செவ்வாய்பேட்டையில் உள்ள தனியார் வங்கியில் பணிபுரிந்து வந்தார். பொங்கல் விடுமுறையையொட்டி பார்த்திபன் தனது நண்பர்களான சுகுமார், கேசவன் ஆகியோருடன் ஆந்திராவுக்கு சுற்றுலா சென்றார்.

அவர்கள் 3 பேரும் சுற்றுலா முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இந்நிலையில், இரவு 10.30 மணியளவில் மணவாளநகர் ஒட்டிக்குப்பம் பழைய பேருந்து நிலையம் அருகே அவர்கள் வந்தபோது, சாலையின் நடுவில் 4 வாலிபர்கள் அமர்ந்து போதையில் ரகளை செய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

அப்போது இருதரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, போதையில் இருந்த இளைஞர்கள் 4 பேரும் சேர்ந்து, மோட்டார் சைக்கிளில் இருந்த பார்த்திபன் மற்றும் அவரது நண்பர்களை தாக்கத் தொடங்கினர். இதில் அவர்கள் நிலை தடுமாறி கீழே விழுந்த நிலையில், போதை இளைஞர்கள் அருகில் இருந்த சிமெண்ட் கல்லை எடுத்து 3 பேரின் தலையில் போட்டனர்.

இதில் பார்த்திபன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். சுகுமார் மற்றும் கேசவன் ஆகியோர் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடினர். நடுரோட்டில் வாகனங்கள் ஒருபுறம் சென்று கொண்டிருந்த சமயத்தில், கஞ்சா போதையில் 4 இளைஞர்கள் சேர்ந்து அரங்கேற்றிய இந்த கொடூர கொலை சம்பவத்தை, அங்கிருந்தவர்கள் சிலர் தங்கள் செல்போனில் படம்பிடித்தனர்.

இதற்கிடையில், அந்த வழியாக சென்றவர்கள் சிலர், உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி சுகுமார் உயிரிழந்தார். கேசவன் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த இரட்டை கொலை சம்பவம் திருவள்ளூர் மணவாளநகர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், மணவாளநகர் போலீசார் இது குறித்து விசாரணை நடத்தி, மணவாளநகர் பகுதியை சேர்ந்த ஜவகர், வினோத் குமார், ஜோதீஸ் மற்றும் நீலகண்டன் ஆகிய 4 பேரை அதிரடியாக கைது செய்தனர். அவர்களிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே கைதான ஜவகருக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அதே போல், நீலகண்டனுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இருவரும் போலீஸ் விசாரணையின்போது தவறி விழுந்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், மற்ற இருவருக்கும் உடலில் லேசான காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், 4 பேருக்கும் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கடன் பிரச்சினையில் அரிவாள் வெட்டு: வாலிபர் கைது

**திருநெல்வேலி, ஜன 18:** திருநெல்வேலி மாநகரம் சந்திப்பு அருகேயுள்ள மீனாட்சிபுரத்தை சேர்ந்த ஆறுமுகம் மகன் ஹரி (வயது 18), அவருடைய நண்பரான பாலாஜி என்பவரை பார்க்க சி.என்.கிராமம் சென்றுள்ளார். அப்போது பாலாஜி, ஹரியின் செல்போனில் இருந்து, டவுண் புட்டாரத்தி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த மகேந்திரன் மகன் பாஞ்சாலராஜன்(33) என்பவருடைய மாமியாரிடம் கொடுத்த கடனை திருப்பி கேட்டுள்ளார்.

இந்த நிலையில் சி.என்.கிராமம் அருகே நின்று கொண்டிருந்த ஹரி, அவருடைய நண்பர் பாலாஜி, இசக்கிபாண்டி ஆகியோரை வழிமறித்த பாஞ்சாலராஜன், அவர்களை அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி அரிவாளை கொண்டு தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தியுள்ளார். இதனையடுத்து திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் ஹரி கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர் பாஞ்சாலராஜனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

## கள்ளக்காதல் விவகாரத்தில் வாலிபருக்கு நேர்ந்த கொடூரம்

**பல்லாவரம், ஜன.18:** சென்னையில் திரிசூலம் பகுதியில் வசித்து வந்தவர் செல்வக்குமார் (வயது 22). கட்டிடத் தொழிலாளியான இவருக்கு, கணவரை பிரிந்து வாழ்ந்து வந்த ரீனா(24) என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இருவரும் திருமணம் செய்யாமலேயே திரிசூலம் பகுதியில் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து, கணவன்-மனைவி போல் குடித்தனம் நடத்தி வந்துள்ளனர். இதற்கிடையில் ரீனாவின் தோழியான ரஜிதா (25) என்பவருடன் செல்வக்குமாருக்கு பழக்கம் ஏற்பட்டது. அவருடனும் அடிக்கடி ரகசியமாக தனிமையில் இருந்து வந்தார். இந்த விவகாரம் தோழிகளான ரீனா மற்றும் ரஜிதாவுக்கு தெரியவந்தது. இதனால் இருவரும் செல்வக்குமாருடன் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளனர்.


இந்த நிலையில் ரஜிதா மற்றும் ரீனாவுக்கு 17 வயது சிறுவனுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. 3 பேரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து வந்துள்ளனர். மேலும் சில ஆண்களுடன் ஒன்றாக ஒரே அறையில் மதுப்பழக்கம், உல்லாசம் என ஜாலியாக இருந்து வந்துள்ளனர். இதையறிந்த செல்வக்குமார் தனது கள்ளக்காதலிகள் மற்றும் அவரது நண்பர்களை கண்டித்ததுடன், அவர்களுடன் தகராறு செய்தார். இதனால் ரீனா, ரஜிதா இருவரும் செல்வக்குமாரை, திரிசூலத்தில் உள்ள பூங்காவுக்கு சமாதானம் பேச வரும்படி அழைத்தனர். அதன்படி போதையில் இருந்த செல்வக்குமார் சமாதானம் பேச பூங்காவுக்கு சென்றார்.

அப்போது அங்கு மறைந்து இருந்த 17 வயது சிறுவன் மற்றும் அவரது கூட்டாளியான அலெக்ஸ் ஆகியோர் கையில் இருந்த கத்தியால் செல்வக்குமாரின் முகத்தில் சரமாரியாக வெட்டினர். இதில் கண், வாய் என முகம் முழுவதும் பலத்த காயமடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்தார். ஆனாலும் ஆத்திரம் அடங்காமல் அவரது மர்ம உறுப்பையும் அறுத்தனர்.

செல்வக்குமாரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தனர். இதனால் 4 பேரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். இதுபற்றி தகவல் அறிந்து வந்த பல்லாவரம் போலீசார், உயிருக்கு போராடிய செல்வக்குமாரை மீட்டு சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி செல்வக்குமார் பரிதாபமாக இறந்தார்.

இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் கொலையான செல்வக்குமார், ரீனாவுடன் ஒரே வீட்டில் வசித்து வந்தபோது, வாழ்க்கையில் எனக்கு கிடைத்த பெரிய பரிசு என் பொண்டாட்டிதான் என 'ரீல்ஸ்' வெளியிட்டிருந்தார். இந்த சூழலில் அவருடன் பழகி வந்த ரீனா மற்றும் அவரது தோழி ரஜிதா இருவரும், 'இன்ஸ்டாகிராம்' மூலம் பல வாலிபர்களுக்கு காதல் வலை விரித்து, அவர்களிடம் பணம் பறித்து உல்லாசமாக இருந்து வந்துள்ளனர். இதனை அறிந்த செல்வக்குமார், இதுபற்றி தட்டிக்கேட்டதால் 2 பெண்களும் சேர்ந்து நண்பர்கள் உதவியுடன் அவரை தீர்த்துக்கட்டியது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் ரீனா, ரஜிதா மற்றும் 17 வயது சிறுவன் ஆகிய 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



மறைந்த முன்னாள் முதலமைச்சர் அதிமுக நிறுவன தலைவர் மான எம்ஜிஆர் 109.ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே வடமதுரை ஊராட்சி அரசு தொடக்கப்பள்ளி அருகே உள்ள எம்ஜிஆர் திருவுருவ சிலைக்கு எல்லாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். மகேந்திரன் தலைமையில் எல்லாபுரம் அம்மா பேரவை செயலாளர் ரமேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் ஏழை எளிய மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.இதில் நிர்வாகிகள் ராஜீவ் காந்தி,நாகப்பன்,ராஜா, தமிழ் மன்னன், ஜெகதீஷ், பிரண்ட்ஸ், மாவீரன், சரத், சரவணன் பொதுமக்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்....



விழுப்புரம் மாவட்டம் காணை கிழக்கு ஒன்றியம் கல்யாணம் பூண்டியில் அஇஅதிமுக நிறுவனர் முன்னாள் தமிழக முதல்வர் எம்..ஜி.ஆர் அவர்களின் 109 ஆம் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. கிளைக் கழக செயலாளர் தே.சௌந்தரராஜன் எம்.ஜி.ஆர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் கிளைக் கழக அவைத் தலைவர் கோ.தேவராஜ் இளைஞர் பாசறை ஒன்றிய இணைச் செயலாளர் தே.ராமச்சந்திரன் கிளைக் கழக நிர்வாகிகள் நாகமுத்து பார்த்திபன்ரா ஞானமூர்த்தி இளைஞரணி இணைச் செயலாளர் ரா.சக்திவேல் பூத் கமிட்டி நிர்வாகிகள் அமிர்தம்...சரிதா... மஞ்சுளா தேவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க.மாணவரணி கோவை கவுண்டம்பாளையம் பகுதி சார்பாக சமத்துவ பொங்கல் விழா



**கோவை, ஜன.18:** மாணவரணி மாநில செயலாளர் ராஜீவ் காந்தி, தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி ஆகியோர் பங்கேற்பு கோவையில் கவுண்டம்பாளையம் பகுதி தி.மு.க.மாணவரணி சார்பாக சமத்துவ பொங்கல் விழா கவுண்டம்பாளையம் பகுதி மாணவரணி அமைப்பாளர் சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தி.மு.க.மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி, ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், சாய்பாபாகாலனி பகுதி மாணவரணி அமைப்பாளர் கோவை தல்ஹா அனைவரையும் வரவேற்று பேசினார். கரும்பு தோரணங்கள் கட்டி ஜல்லிக்கட்டு காளை,ஆடு,சேவல் என கிராமத்தை கண்முன் நிறுத்தியபடி அடுப்பில் பொங்கல் வைத்தனர்.

விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற உறியடித்தல் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்ட பலர் கண்களை கட்டி உறியடித்து கவனம் ஈர்த்தனர். விழாவில்,மாவட்ட அமைப்பாளர் அந்தோணி,மாநகர் மாவட்ட அமைப்பாளர் சிவப்பிரகாஷ்,மற்றும் நிர்வாகிகள் மசூது,பைந்தமிழ்,ஹைதர் அலி திப்புசுல்தான் பள்ளி வாசல் பொருளாளர் வழக்கறிஞர் இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 3 நாட்களில் 160.83 டன் திடக்கழிவுகள் அகற்றம்: சென்னை மாநகராட்சி

**சென்னை, ஜன.18:** சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரைப் பகுதிகளில் 14.01.2026 முதல் 16.01.2026 வரை 160.83 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதிகளை பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கு உகந்த வகையில் மேம்படுத்திட மாநகராட்சி சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


மேலும், மெரினா கடற்கரை. பெசன்ட் நகர், திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை, திருவொற்றியூர் கடற்கரை பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்கள் கொண்டு நாள்தோறும் சுழற்சி முறைகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் கூடுதலாக தூய்மைப் பணியாளர்கள், இயந்திரங்களைக் கொண்டு 14.01.2026 முதல் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது

கடற்கரைப் பகுதிகளை தூய்மையாகவும்,சுகாதாரமாகவும் பராமரிப்பது அனைவரின் பொது பொறுப்பாகும். கடற்கரைகளில் குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள், உணவுப் பொருள், எச்சங்கள் உள்ளிட்ட எந்த விதமான கழிவுகளையும் கொட்டுவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, கடற்கரைப் பகுதிகளுக்கு வருகைதரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தங்களது குப்பைக் கழிவுகளை, அதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டும் போட்டு, மாநகராட்சியின் தூய்மைப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தை மாத தேய்பிறை சிறப்பு வழிபாடு









**திருவண்ணாமலை, ஜன.18:** துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேடந்தவாடி கிராமத்தில் வேதமா எனும் நகரில் வேதநாயகி உடனமர் வேதநாத ஈஸ்வரர் ஆலயத்தில் தை மாத தேய்பிறை பிரதோஷம்,மாட்டுப் பொங்கலை முன்னிட்டு மூலவர்க்கும் உற்சவர்க்கும் சிறப்பு அபிஷேகங்கள் ராமன் ஐயர் அவர்களால் பால், தயிர், சந்தனம், விபூதி, பன்னீர், பஞ்சாமிர்தம், வெட்டிவேர், இளநீர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்களும் வண்ணமலர் மாலைகளால், காய் கனிகளால், பழங்களால், இனிப்புகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாரதனையும் நடைபெற்றது.

உற்சவர் அலங்காரத்துடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, மேளதாளத்துடன், சங்குகள் முழங்க ஆலயம் மூன்று முறை சுற்றி வந்தது. ஏராளமான பக்தர்கள் பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து ஆலயம் சுற்றி வந்தார்கள். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

## எம்ஜிஆர் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்







**வேட்டவலம், ஜன 18:** திருவண்ணாமலை மலை மாவட்டம் கீழ் பெண்ணாத்தூர் ஒன்றியம் கல்லாய் சொரத்தூர் கிருஷ்ணர் மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் பாரதரத்னா எம்ஜிஆர் பிறந்த நாளை முன்னிட்டு ஆஇஅதிமுக பிரமுகர் ராமமூர்த்தி தலைமையேற்று கட்சியின் கொடியினை ஏற்றி மக்கள் திலகம் எம்ஜிஆர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினார் உடன் இளைஞர் அணி செயலாளர் .தனசேகரன் மற்றும் . உறுப்பினர்கள் ஏழுமலை முனியப்பன் ஜோதி தண்டபாணி அங்கப்பன் போன்ற மன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் மேலும் இவ்விழாவில் பொதுமக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் டாக்டர் இராம மணிமாறன் தலைமையில் நடைபெற்றது பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## திருக்குறள் வாரம்: மெரினா கடற்கரையில் இன்று இசை நிகழ்ச்சி- மாநகராட்சி தகவல்

**சென்னை, ஜன 18:** பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருக்குறள் வாரத்தினை முன்னிட்டு, திருக்குறள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களை மையமாகக் கொண்ட இசை நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் நாளை (18.1.2026, ஞாயிற்றுக்கிழமை) மாலை நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் "திருக்குறள் வாரம்" கொண்டாடப்படும் என தமிழ்நாடு முதல்-அமைச்சர் கடந்த ஆண்டு 31.12.2024 அன்று குமரிமுனை வள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்வின் போது அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் திருக்குறள் குறளாசிரியர் மாநாடு, அரசு அலுவலர்களுக்கான போட்டிகள், பொதுமக்களுக்கான திருக்குறள் போட்டிகள், கல்லூரி மாணவ, மாணவியருக்கான கலை மற்றும் இலக்கியப் போட்டிகள், திருக்குறள் நாட்டிய நாடகம், பட்டிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன் ஒரு பகுதியாக, சென்னை மெரினா கடற்கரையில் திருக்குறள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களை மையமாகக் கொண்ட இசை நிகழ்ச்சி நாளை (18.1.2026) மாலை நடத்தப்படவுள்ளது. இதில் இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தனின் பெரும் முயற்சியால் கடந்த பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு இசையமைக்கப்பட்ட திருக்குறளும், தமிழ் இலக்கிய பாடல்களும் இசை வடிவில் மக்கள் ரசிக்கும் வகையில் கொண்டாட்ட இசையாக மாலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

முன்னதாக நாளை (18.1.2026) பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியும், 6 மணி முதல் 6.30 மணி வரை திரைப்பட நடிகை சுஹாசினியின் "என் சென்னை" நிகழ்ச்சி நடத்தப்படும்.

இந்த இசை நிகழ்ச்சியானது நாளை (18.01.2026, ஞாயிற்றுக்கிழமை) சென்னை மெரினா கடற்கரையில் எல்லோரும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கம்பம் நகரில் பட்டத்து காளைக்கு அபிஷேக ஆராதனை



**தேனி, ஜன.18:** தேனி மாவட்டம் கம்பம் நகரில் அமைந்துள்ள நந்தகோபாலன் தம்பிரான் மாட்டுத் தொழுவில் பொதுமக்கள் பொங்கல் வைத்து பட்டத்து காளையை வழிபட்டனர் பசுக்களை தெய்வங்களாக வழிபடும் ஒக்கலிக கவுடர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது. கம்பம் நந்தகோபாலன் தம்பிரான் மாட்டுத் தொழு இங்கு கருவறையில் சுவாமி விக்கிரகங்கள் கிடையாது கம்பம் ஓடைப்பட்டி சிலமலை காமய கவுண்டன்பட்டி கம்பம் புதுப்பட்டி கூடலூர் உள்ளிட்ட தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் இந்த திருவிழாவிற்கு வருவார்கள்.

இந்த கோவிலில் உள்ள பட்டத்து காளைக்கு மட்டுமே பூஜை நடைபெறும் மாட்டுப் பொங்கல் முன்னிட்டு ஒக்கலிகர் சமுதாயத்தின் சார்பில் பட்டத்துக்காரர் கோடியப்பனார் பூசாரி பெரியதள வீட்டுக்காரர் தலைமையில் ஸ்தம்பத்திற்கு பூஜை நடத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்ட பட்டத்து காளைக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது முன்னதாக மண்ணிலும் சந்தனமும் கலந்த தண்ணீரில் பட்டத்துக் காளையை குளிக்க வைத்து பட்டாடை போர்த்தப்பட்டது.

கோவில் வளாகத்தில் திரண்ட பொதுமக்கள் பொங்கல் வைத்து பட்டத்து காளையை வழிபட்டனர் கருவறையில் ஸ்தம்பத்திற்கு நடந்த சிறப்பு பூஜையில் பங்கேற்று வழிபட்டனர். கோசோலையில் உள்ள காளை மாடுகளுக்கு பொதுமக்கள் பசுதீவனங்கள் வழங்கி மகிழ்ந்தனர் கோயில் வளாகத்தில் உள்ள குலக்கோயில்களில் பொங்கல் வைத்து வழிபட்டனர்.

நூற்றுக்கணக்கான மாலை கோயில்கள் இந்த வளாகத்தில் உள்ளது இந்த கோவிலின் தனிச் சிறப்பாகும் தேனி மாவட்டத்திலிருந்து பல்வேறு ஊர்களில் உள்ள ஒக்கலிக கவுடர் சமுதாயத்தை சேர்ந்தவர்களும் மற்றும் அனைத்து சமூகத்தினரும் திரளாக விழாவில் கலந்து கொண்டு பட்டத்துக் காளையை வணங்கி வழிபட்டனர் விழாவிற்கான ஏற்பாடுகளை ஒக்கலிக கவுடர் மகாஜன சங்கத்தினர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

அனைத்து சமூகத்தினரும் தை பிறந்த இரண்டாம் நாள் இப்பகுதியில் பிறக்கும் நாட்டுக காளை மாட்டுக் கன்றுகளை இந்த கோவிலிற்கு தானமாக வழங்குவது தேனி மாவட்டம் மட்டுமில்லாமல் அனைத்து பொதுமக்களும் வழக்கமாக உள்ளது.

இந்த கோவிலின் தனிச் சிறப்பு இதுபோன்று நேற்று நடைபெற்ற விழாவிலும் ஏராளமான கன்றுகள் தானமாக வழங்கப்பட்டது.

# திருவையாறு ஔவைக்கோட்டத்தில் திருவள்ளுவர் நாள் விழா




திருவையாறு ஔவைக்கோட்டத்தில் திருவள்ளுவர் நாள் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ் ஐயா கல்விக் கழகத் தலைவர் முனைவர் மு.கலைவேந்தன் தலைமையில் நடைபெற்றது .ஓய்வுபெற்ற சுகாதார ஆய்வாளர் இரவீந்திரன் முன்னிலை வகித்தார் ஔவைக்கோட்ட முகப்பில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மருதுபாண்டியர் வரலாற்று ஆய்வாளர் கவிஞர் ச.தமிழரசன் மாலை அணிவித்தார். .மெல்பர்ன் தமிழ்ச்சங்கமேனாள் தலைவர் சுந்தரேசன் திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டினார் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஔவை அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# குளித்தலையில் எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழா




கரூர் மாவட்டம் குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் வலையப்பட்டி கருணாகரன் தலைமையில் ஒன்றிய பகுதி முழுவதும் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களின் 109 ஆவது பிறந்தநாள் விழாக்கள் தனித்தனியே நடந்தது. எம்.ஜி.ஆர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட பிரதிநிதி ராஜா, முன்னாள் கவுன்சிலர் கல்யாணராமன், ஐ.டி. விங் நிர்வாகி சரவணன் உட்பட திரளான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# உரிமை கோரப்படாத ஆதரவற்ற, அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்து வரும் சமூக செயற்பாட்டாளர்க்கு "பொதுநல மாமணி" பாராட்டுப்பட்டயம்



**மணற்பாறை, ஜன.18:** மணற்பாறை திருக்குறள் பயிற்றகம் 48ஆம் ஆண்டுத் திருவள்ளுவர் திருவிழா மணற்பாறை மகாலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருக்குறள் பயிற்றரகம் நிறுவுநர் தமிழ் செம்மல் திருக்குறள் புலவர் முனைவர் நாவை சிவம், முனைவர் சூர்யா சுப்பிரமணியம், பாவலர் தாழை இளவழகன், நந்தவனம் சந்திரசேகரன் முன்னிலையில் மயான பூமியில் மனைவி, மகளுடன் ஆதரவற்ற, அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்து வருவது மட்டுமின்றி அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க இலவச நூலகம்,பசிப்பிணி போக்க அன்றாடம் அன்னதானம், பாரம்பரியம் காக்க புழங்கு பொருட்கள் காட்சியகம் வைத்துள்ள யோகா ஆசிரியர் விஜயகுமார் தொண்டுகளைப் போற்றி "பொதுநல மாமணி" பாராட்டு பட்டயம் வழங்கி சிறப்பித்தார்.இது குறித்து யோகா ஆசிரியர் விஜயகுமார் கூறுகையில்,திருச்சியில் மயான பூமியில் மனைவி, மகளுடன் உரிமை கோரப்படாத ஆதரவற்றஅனாதை பிரேதங்களை நல்லடக்கம் செய்து வருகிறோம். மரணமானது துயரத்தின் உச்சம் ஆகும். இறந்தவரின் உடலை அவரின் சொந்த இருப்பிடத்துக்கோ, வீட்டுக்கோ, நெருக்கமானவர்களுக்கோ ஊருக்கோ உறவினர்களுக்கோ தகவல் கொடுக்க முடியாமல் பெயர் விலாசம் தெரியாத உரிமை கோரப்படாத உடல்கள் ஏராளம். இப்படி உரிமை கோரப்படாத உடலை உரிய மரியாதையுடன் நல்லடக்கம் செய்து வருகிறோம். மரணம் ஒன்று தான். சம்பவங்கள் பல. இதன் வலியும் வேதனையும் வெறும்வார்த்தைகளால்விவரிக்க முடியாதது. விபத்தில் பலியாகி உடல் மூட்டையாய் வந்ததும் உண்டு. ஆற்று மதகில் ஊறிய நிலையில் கிடந்த உடலும் உண்டு.

ஒவ்வொரு பகுதியிலும் பிச்சைக்காரர்கள் யாசகம் கேட்டு ஜீவனம் நடத்தி வருகிறார்கள். பிச்சைக்காரர்கள், பார்வை குறைபாடு, ஊனமுற்றோர், தொழுநோயாளிகள், மூத்த குடிமக்கள், கைம்பெண்கள், கணவனால்கைவிடப்பட்டவர்கள், வாழ்வாதாரம் இழந்து தவிப்பவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்,பலர் ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், போக்குவரத்து சிக்னல், சுற்றுலா தலங்கள், கோயில்கள் மற்றும் வழக்கமான கூட்டம் அதிகமாக இருக்கும் பல பகுதிகளில் பலர் பல நிலைகளில் பிச்சை எடுப்பவர்கள், சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கின்றனர், சிலர் கிழிந்த மற்றும் அழுக்குத் துணியுடன் அமர்ந்திருக்கின்றனர், சிலர் போர்வையால் உடலை மூடிக்கொண்டு தூங்குகின்றனர், சிலர் தங்கள் குடும்பத்தினருடனும் அமர்ந்திருக்கின்றனர், அவர்கள் ஊனமுற்றவர்களாகவோ, வேலை செய்ய இயலாமையினாலோ, வயதானவர்களாகவோ அல்லது பார்வையற்றவர்களாகவோ அல்லது அடிப்படைத் தேவைகளுக்கு உண்மையில் பணம் தேவைப்படுவதாலோ பிச்சை எடுக்கிறார்கள். இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து, தங்கள் வாழ்வாதாரத்திற்காக பிச்சை எடுக்கின்றனர். ஆனால் பிச்சை எடுப்பதை சிலர் தொழிலாக தொடர்வது வருத்தமளிக்கிறது.

வீடற்ற நிலையில் பணம் அல்லது உணவு போன்றவற்றை பிறரிடம் இருந்து கேட்டுப் பெறும் நபர்கள், பல சமூக சிக்கல்களுடன் போராடுகிறார்கள். இவ்வாறு யாசகம் கேட்பவர்கள் வறுமை, மனநலப் பிரச்சினைகள், உடல் நலக்குறைவு, முதுமை போன்ற பல்வேறு காரணங்களில் காக்கப்பட வேண்டியவர்களால் கைவிடப்பட்டு வீடற்றவர்களாகவும், பிச்சைக்காரர்களாகவும்உள்ளனர். பொருளாதாரக் காரணம் மற்றும் குறைந்த ஊதியம் காரணமாக பலர் வீடற்றவர்களாக மாறுகிறார்கள். மனநலப் பிரச்சினைகள் மற்றும் போதைப்பொருள் அடிமை போன்றவையும் வீடற்ற நிலைக்கு ஒரு காரணமாக உள்ளது. வீடற்ற பிச்சைகாரர்கள் பல சமூக புறக்கணிப்புகளை எதிர்கொள்கிறார்கள். வீடற்ற பிச்சைகாரர்கள் வேலை செய்ய மறுக்கிறார்கள், பிச்சை எடுத்து ஜீவனம் நடத்திய இருபாலரும் நோய்வாய்ப்பட்டு பேருந்து நிறுத்தத்திலோ, சாலை ஓரத்திலோ பலர் இறந்து விடுகின்றனர். பொதுமக்களால் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு சென்றவர்களும் உண்டு. புராண, இதிகாச காலம்தொட்டு மயானங்களில் இந்து மதத்தில் பெண்களுக்கு அனுமதி இல்லை என்ற நிலை இன்றளவும் தொடர்ந்து வருகிறது. ஒரு வீட்டில் இறப்பு ஏற்பட்டால் சுடுகாட்டில் அல்லது உடலை புதைக்கும் இடுகாட்டில் ஆண்கள் தான் இறுதி காரியங்களை செய்து வருவார்கள். பெண்கள் வீட்டில் காரியங்களை செய்வதோடு சரி. சுடுகாட்டில், மயானத்தில் காரியங்கள் செய்வதற்கு பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை. உயிருக்கு உயிராக நேசித்த கணவர் அல்லது பிள்ளைகள் அல்லது நெருங்கிய உறவினர்களின் உடலுக்குக்கூட அந்த இடத்தில் இறுதியாக முகத்தை கூட பார்க்க அனுமதிக்கப்படாத இந்த உலகில் மனைவி, மகளுடன் ஆதரவற்ற அனாதை பிரேதங்களை அடக்கம் செய்து வருகிறோம். மனைவி சித்ரா வழக்கறிஞர் பணியினை செய்து வருகிறார். மகள் கீர்த்தனா வழக்கறிஞர் பட்டப்படிப்பினை படித்து வருகிறார்.

உலகம் எவ்வளவோ முன்னேறினாலும் வறுமை மாறாமல் தொடாகிறது. கொடிது கொடிது வறுமை கொடிது வறுமையின் விளைவை களப் பணியால் அறிந்து அதற்குண்டான அணுகு முறை கொள்கையுடன் தினசரி உணவகங்களில் உபரியாகும் உணவினை பெற்று வறியவர்களுக்கும் எளியவர்களுக்கும் ஆண்டு தோறும் உணவளித்து வருகிறோம். வறுமையை உணாவுப்பூவமாக கள ஆய்வில் கண்டுள்ளோம். 'ஏழ்மையான பொருளாதாரத்தாலோ முதுமை மற்றும் நோயின் அடிப்படையில் காக்கப்பட வேண்டியவர்களால் கைவிடப்பட்டு சாலையோரங்களிலேயே உண்டு உறங்கி கையேந்தி பிச்சை எடுத்து ஜீவனம் நடத்தி மருத்துவ சிகிச்சை இன்றி உடல் நலம் குன்றி குற்றுயிராக உருக்குலைந்து அழுக்கு படிந்த உடல், ஏக்கம் நிறைந்த கண்கள், கறை படிந்த பற்கள், கிழிந்த உடையுடன் சாலை ஓரங்களிலேயே இறந்து போய் விடுகிறார்கள். இவர்கள் போதிய பண வசதி இல்லாமல் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துடன் வாழ்ந்து வருவது எங்களது ஆய்வில் தெரிகிறது. உற்றார் உறவினர் சகோதர சகோதரிகள் உதாசீனத்தால் உறவின்றி பொது மக்களிடம் கையேந்தி வாழ்க்கையினை நடத்துகின்றனர். பல ஏளனத்திற்கு ஆளானவர்கள் படும் கோபம், வேதனை, துக்கம், துயரத்தால் இவர்கள் நிம்மதியாக தூங்கவோ, வேலை செய்யவோ அல்லது சாப்பிடவோ முடிவதில்லை. இவர்களது வேதனைக்கு முக்கியக் காரணியாய் அமைவது உடல்நலக் குறைவும் முதுமையும் தான். மிகவும் ஏழ்மையான வாக்கத்தைச் சோந்தவர்கள் சாப்பிடுவதை குறைத்தும், ஒரு வேளை சாப்பிடுவதை முற்றிலும் தவிர்த்தும் உள்ளனா . இதனால் இவாகளின் மகிழ்ச்சியும் காற்றோடு கலந்து விடுகிறது.ஏன் அடிப்படை உரிமைகளான வீட்டை இழந்து குடும்பத்தை மறந்து தங்களின் சமூகப் பிணைப்பில் இருந்து விலகி ஒரு நிலையற்ற வாழ்வை வாழ்கின்றனா. இப்படி வறுமையில் வாழும் அவாகளின் துன்பங்களும் துயரங்களும் குறித்து சொல்லப்படாதவை ஏராளம். எப்படி இருப்பினும் இன்னும் வறுமை தீாந்தபாடில்லை தொடர்கிறது. ஆதரவற்ற அனாதை பிரேத நல்லடக்க பணியினை மனைவி, மகளுடன் செய்யும் போது பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். என்னைப் பொறுத்தவரை இது ஒரு புனிதப் பணியாக நான் கருதுகிறேன். இவர்களுக்கு மரியாதை செய்ய ஆளில்லை மலர்மாலை அணிவிக்க யாருமில்லை இறுதி ஊர்வலத்திற்கு யாருமில்லை. பிரேதத்திற்கு வாய்க்கு அரிசி போட ஆளில்லை.

இறந்த நபருக்கு ஒரு மகன் இருந்தால் ஒரு மகள் இருந்தால் ஒரு பேத்தி இருந்தால் என்ன செய்வார்களோ அந்த காரியத்தை நாங்கள் செய்கிறோம். கொரோனா இரண்டாவது அலை உச்சத்தில் இருந்த போது பல உடல்களை நல்லடக்கம் செய்துள்ளோம். மேலும் இருபத்தைந்து முறைக்கு மேல் குருதிக்கொடைஅளித்துள்ளேன். வாழ்நாளிற்கு பிறகு படமாய் இருப்பதை விட பாடமாய் இருப்போம் என எனது உடலினை தானமாக வழங்க உறுதியேற்று மனைவி மகள் ஒப்புதலுடன் திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதன் அரசு மருத்துவக் கல்லூரியில் பதிவு செய்துள்ளேன் என்றார்.




# திமுக அரசின் திட்டங்களை ரோல் மாடலாகக் கொண்டு அறிவிப்புகளை வெளியிட்ட அதிமுக

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தாக்கு



**சென்னை, ஜன.18:** தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஒவ்வொரு தேர்தலிலும் கதாநாயகனாக திகழும் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிவாலயம் வாசலில் குத்த வைத்து காத்திருக்கும் அதிமுகவினர், திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியானதும் முதல் காப்பியை வாங்கிக்கொண்டு, அதை அப்படியே காப்பியடித்து அதிமுகவின் தேர்தல் அறிக்கையாக வெளியிடுவது தான் வழக்கமான நடைமுறை. இந்த முறை, அதில் விசித்திர மாற்றத்தை செய்து தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு "டூப்" போட்டு அறிக்கை வெளியிட வேண்டிய அளவுக்கு அதிமுகவின் நிலைமை பரிதாபமாக போய்விட்டது !

2021ல் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியான போது, தமிழ்நாட்டின் நிதி நிலைமை சரியில்லை எனவே இதையெல்லாம் நிறைவேற்றவே முடியாது என்றார் திரு.பழனிசாமி. ஆனால், தமிழ்நாட்டை அனைத்து தளங்களிலும் முன்னேற்றியதுடன், எதையெல்லாம் திமுகவால் செய்ய முடியாது என்று எதிர்கட்சி தலைவர் சொன்னாரோ, அதை எல்லாம் நம் திராவிட நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் வெற்றிகரமாக செயல்படுத்தி காட்டிவிட்டார்.

இப்போது புதிதாக எதுவும் சிந்திக்க திராணி இல்லாமல் திமுக அரசின் பழைய திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டும் அறிவிப்புகளை வெளியிடுகிறது அதிமுக.

அதிமுக கட்சியின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் உள்ளவர்களின் திறமை மீது நம்பிக்கை இல்லாமல், திமுக அரசின் சாதனை திட்டங்களை ரோல் மாடலாகக் கொண்டு, அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இது உங்களுக்கு செட் ஆகல சார். வெயிட் பண்ணுங்க. உங்க மூளையை இப்ப கசக்க வேண்டாம். எப்போதும் போல இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைக்கும் திமுக_தேர்தல்_அறிக்கை வந்த பிறகு, அதை முழுமையாக உங்க பழைய ஜெராக்ஸ் மிஷினில் காப்பி எடுக்கலாம். என தெரிவித்துள்ளார்.

# நான் இருப்பதே திமுகவிற்கு மறந்துவிட்டது: சசிகலா பரபரப்பு பேட்டி



**சென்னை, ஜன.18:** சென்னை போயஸ் கார்டனில் உள்ள தனது இல்லத்தில் சசிகலா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எம்.ஜி.ஆரின் 109-ஆவது பிறந்தநாளில் அவரது சிலைக்கு மரியாதை செலுத்தினேன். அவர் முதல்வராக இருந்தபோது மக்களுக்காக பாடுபட்டவர். ஏழை குழந்தைகளுக்காக சத்துணவு திட்டத்தை கொண்டு வந்தவர். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், ரேஷன் அரிசி உள்ளிட்டவற்றை வழங்கினார். அதற்கு முன்பு தனியார் நிறுவனங்கள் மூலம் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன. எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு பிறகுதான் ரேஷன் கடைகளை அரசு ஏற்று நடத்தியது.

தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவே திமுக பொங்கல் பரிசுத் தொகையை வழங்குகிறது. 2023 ஆம் ஆண்டு பொங்கல் தொகையை வழங்கினார்கள். அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகள் வழங்கவில்லை. இப்போது தேர்தல் வருவதால் திமுக மீண்டும் பொங்கல் தொகையை மக்களுக்கு வழங்குகிறது. தேர்தல் வரும் போது விலைவாசி உயர்வைக் குறைப்பதாக அரசு நடவடிக்கை எடுக்கிறது.

தமிழ், திராவிடம் என்று சொல்லி எத்தனை நாட்கள் மக்களை ஏமாற்ற முடியும்? இப்போது 'உங்கள் கனவுகளை சொல்லுங்கள்' என்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்துள்ளனர். அப்படியானால் மக்கள் கனவுகள் மட்டும்தான் காண வேண்டுமா? அதிலும் ஒரு சூட்சமம் உள்ளது. அந்த திட்டத்திற்கு தனியார் இடம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்கள் நமக்கு வாக்களிப்பார்களா என்பதை அறிய திமுக அரசு ஆட்சியை பயன்படுத்தி வருகிறது. ஒவ்வொரு முறையும் திமுக சொன்னதை செய்தது இல்லை. திமுக என்ன நினைக்கிறது? கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரியே இல்லை என திமுக நினைக்கிறது. நான் ஒருத்தி இருப்பதையே திமுக மறந்துவிட்டது.இவ்வாறு அவர் பேசினார்.

# உழவர் திருநாளன்று கூட உறுத்தாமல் ஊருக்கே ஊற்றிக் கொடுத்துள்ளது திமுக அரசு! - நயினார் நாகேந்திரன்

**சென்னை, ஜன.18:** தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

"போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம்" என உருகி உருகி காணொளி வெளியிட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில், பொங்கல் பண்டிகையையொட்டி தமிழகத்தில் சுமார் ரூ. 518 கோடிக்கும் அதிகமாக மது விற்பனை களைகட்டியிருப்பது சுவாரஸ்யமான நகை முரண். திமுக ஆட்சிக்கு வந்ததிலிருந்து சாராய வாடை இல்லாத கொண்டாட்டங்களே இல்லை என்று கூறுமளவிற்குப் பண்டிகை நேரங்களில் சாராய விற்பனையைப் பல மடங்குகளாக முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கிறது இந்த டாஸ்மாக் மாடல் அரசு.

அதிலும், குறிப்பாக பொங்கல் பண்டிகைக்கு ரூ. 3000 கொடுக்கிறோம் என ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துவிட்டு, அந்தப் பணத்தை டாஸ்மாக் வாயிலாக வசூலித்துள்ள திமுக அரசின் அறிவாற்றலைப் பார்க்கையில், இதற்குப் பருத்தி மூட்டை குடோனிலேயே இருந்திருக்கலாமே என்ற நகைச்சுவை வசனம் தான் நினைவிற்கு வருகிறது. மக்களின் மகிழ்ச்சியை விட, மக்களின் மன நிம்மதியை விட, போதையால் சமூகத்தில் நிகழும் அசம்பாவிதங்களைத் தடுப்பதை விட டாஸ்மாக் வருமானத்தைப் பெரிதாகப் பார்க்கும் ஒரு அரசு, இனியொரு முறை தப்பித்தவறி கூட தமிழகத்தை ஆளக் கூடாது! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com